# அகவிழி

விழி : 01 ஜனவரி 2005 பார்வை : 05 விலை : ரூபா.25.00



உள்ளே....

மா.சின்னத்தம்பி ■ பாடசாலை ஆசிரியருக்கான நேர முகாமைத்துவம் : சில பரிசீலனைகள் — ஒருநோக்கு

மா.கருணாநிதி ■ ஆசிரியர் கல்வியும் பயிற்சியும் பாடசாலைகளில் அவற்றின் பயன்பாடும்

வி. தற்பரன் ■ முன்பள்ளிக் கல்வியும் ஆசிரியரும்: சமூகவியல் இரட்டைத்தன்மை நோக்கி...

பரா. இராஜேஸ்வரன் ■ தீவகவலயக் கல்வியும் ஆசிரியர் பிரச்சினையும்

சோ. சந்திரசேகரன் ■ ஆசிரியர் கல்வித்துறை சீர்திருத்தப்பட வேண்டும்

# அகவிழி

மாத இதழ்

**ஆசிரியர்:**
தெ.மதுசூதனன்

**ஆசிரியர் குழு :**
சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

**நிர்வாக ஆசிரியர்:**
மனோ இராஜசிங்கம்

**ஆலோசகர் குழு :**
பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பேரா.சபா.ஜெயராசா
(கல்விப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பேரா.சோ.சந்திரசேகரன்
தலைவர், கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)

கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

மா.சின்னத்தம்பி
(தலைவர், கல்விப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)

கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)

மா.செல்வராஜா
(தலைவர், கல்விப்பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்)

தை.தனராஜ்
(பணிப்பாளர், தமிழ்த்துறை,
தேசிய கல்வி நிறுவகம்)

உ.நவரட்ணம்
(பணிப்பாளர்,
ஆசிரியவாண்மை அபிவிருத்தி
நிலையம், தேசிய கல்வி நிறுவகம்)

**அச்சு :**
ரெக்னோ பிரின்ட், கொழும்பு - 06

**வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :**


**AHAVILI**
49/1, Medawelikada Road, Rajagiriya.
Tel : 011-2869257
E-mail : ahaviliguru@yahoo.co.uk


## ஆசிரியரிடமிருந்து...

**2004** முடிவடைந்து 2005 க்குள் நுழைகின்றோம். இந்த நுழைவு சந்தோசமாக இல்லை. 2004 டிசம்பர் 26 ஏற்பட்ட "கடல்கோள் பேரிடர்" (சுனாமி இராட்சதக் கடலலைகள்) வரலாறு காணாத இழப்புகளை அழிவுகளை நமக்குத் தந்துள்ளது.

சுனாமி இராட்சத அலைகள் வடக்கு, கிழக்கு மற்றும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை உள்ளிட்ட கடற்கரையோரப் பிரதேசங்கள் - கடல் வாழ் மக்கள் மீது ஏற்படுத்திய கோரத்தாண்டவம் இது காறுமான போரின் விளைவுகளை - சுமைகளைக் கூட மிஞ்சி விட்டது.

இதுவரை வடக்கு கிழக்குத் தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்ட போரியல் வாழ்முறையால் பல்வேறு துன்பங்கள், அழிவுகள், இழப்புகள் கண்டு வருவது விதியாகவே தொடர்கிறது. ஆனாலும் "சமாதான முயற்சிகள்" "தீர்வு முயற்சிகள்" ஏற்பட்டு மக்களின் உரிமைகள், அபிலாசைகள் யாவும் பேணப்பட்டு வாழ்வு மேம்பட வேண்டுமென வாழ்ந்தவர்கள் மீது இன்று "இயற்கைப் பேரிடர்" நிகழ்த்திய கொடுமைகள் சொல்லி மாளாது.

தமிழ்ச்சூழலில் பாடசாலைகள் மாணவர்களுக்கு கல்வி வழங்கும் நிறுவனம் மட்டும் அல்ல. அகதிகளால் தஞ்சம் கோரும் புகலிடமாகவும் உள்ளது. ஆனால் இதுவே இன்றுவரை தொடர்கிறது. நமக்கு போரியல் வாழ்முறை மட்டுமல்ல வெள்ளம், வரட்சி, புவி நடுக்கம், சுனாமி இராட்சத அலைகள் போன்றவற்றாலும் அகதிகளாகும் நெருக்கடி தற்போது ஏற்பட்டுள்ளது.

இன்று நாம் போரியல் மற்றும் இயற்கைப் பேரிடர் போன்றவற்றால் பல்வேறு நெருக்கடிகளை அழிபாடுகளை சந்திக்க வேண்டியவர்களாகி விட்டோம். மேலும் இந்த நெருக்கடிகளால் நமது சமூகக் கட்டமைப்பின் தாங்கிகளாக உள்ள பல்வேறு நிறுவனங்கள் சிதைவுற்று இயங்க முடியாத சூழல் உருவாகிறது. இதனால் சமூக அசைவியக்கம் மேலும் மேலும் மோசமாகி வருகிறது.

ஆகவே இன்று நம்மைச் சூழும் அனைத்து விதமான நெருக்கடிகளில் இருந்தும் மீண்டு வாழ்வில் நம்பிக்கை பெற்று வாழ்வதற்கான உத்தரவாதத்தை, சமூக இலக்குகளுக்கான சமூகச் சூழலை உருவாக்கும் பாரிய பணி நம் ஒவ்வொருவர் மத்தியிலும் உள்ளது.

அனைத்துச் சமூகச் செயன் முறைகளும் ஸ்தம்பித்து நிலைகுலைந்து இருக்கும் இத் தருணத்தில் சமூகத்தில் ஓர் சமநிலை பேணும் நோக்கில் சீராக்கச் செயன் முறைகள் (Adjusment Process) முக்கியத்துவம் பெறும். இதனை நிறைவேற்றுவதில் ஆசிரியர்கள் முதன்மையான பங்கு வகிக்க முடியும்.

ஆசிரியர்கள் ஒரு தொழில் செய்யும் பிரிவினர் மட்டுமல்ல. சமூக மாற்றங்களை ஆற்றுப்படுத்தும் முறையிலும் பங்கு கொண்டவர்கள். இந்தப் பண்பு நம்மைப் போன்ற சமூகச் சூழல்களில் தவிர்க்க முடியாதது. ஆதலால்

தொடர்ச்சி பக்கம் 17...

# பாடசாலை ஆசிரியருக்கான
# நேர முகாமைத்துவம்:சில பரிசீலனைகள் - ஒருநோக்கு

## அறிமுகம்

ஆசிரியர்கள் பாடசாலை மட்டத்தில் பணியாற்றும் நிலையில் தனிப்பட்டமுறையில் அவர்களைப் பாதிக்கும் அம்சங்களில் முதன்மையானவற்றுள் நேரம் போதாமை என்பது முக்கியமானது. "நேரம் போதாமை" என்ற காரணம், அவர்களது தாமதமான செயல்கள், பணியிலிருந்து ஒதுங்குதல், வினைத்திறனற்றுச் செயலாற்றுதல், வகை கூறலுக்கு இணங்காமை, போன்ற பலவற்றுக்குரிய நியாயப்படுத்தலுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒருவகையில் தொழில் சார்ந்த பலவீனமாக இனங் காணப்படுகிறது.

நேரம் போதாமை என்பதுபல சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட வகையில் பரபரப்பு, பதகளிப்பு, மன அழுத்தம், கோபம் கொள்ளல், விரக்தியடைதல் போன்ற பல நலக்கேடான நடத்தைக் கோலங்கள் அல்லது மனவெழுச்சிகளை ஏற்படுத்தி விடுகிறது.

இதனால் உடல் ரீதியான பாதிப்புக்களுக்கும், உளரீதியான பாதிப்புக்களுக்கும் அவர்கள் உட்படுவதுடன் பாடசாலை மட்டத்திலும், பாடசாலை சார்ந்த சமூக மட்டத்திலும் அவர்களது நற்பெயர் பாதிக்கப்படுவதற்குரிய வளர்ப்புக்களும் அதிகரித்து விடுகின்றன.

நேரம் சார்ந்த நெருக்கடி உளவியல் ரீதியானதாகவும் உடலியல் மருத்துவ அம்சம் சார்ந்ததாகவும், சுயமுகாமைத்துவம் சார்ந்ததாகவும் இனங்காணப்படுகிறது.

இவ்வடிப்படையில் ஆசிரியர்கள் தொடர்பான நேர முகாமைத்துவம் பற்றிய சில அடிப்படைகளையும் அணுகுமுறை மற்றும் நுட்பங்களையும் இக் கட்டுரை விளக்க முயல்கிறது.

குடும்ப மட்ட தேவைகள் — தாய், மனைவி சகோதரர், மக்கள் சார்ந்த தேவைகளை நிறைவு செய்தல் இது குடும்பத்தலைவர் என்ற நிலையில் அல்லது வீட்டின் பங்காளர் என்ற ரீதியில் நிறைவேற்றப்படவேண்டியவை.

இவை தனிப்பட்ட ரீதியிலான வசதிகள், மதிப்பு, பாதுகாப்பு என்பவற்றுடனும் மறைமுகமாகத் தொடர்புடையவை என்பதால் இவையும் முக்கியமானவை.


மா.சின்னத்தம்பி
தலைவர், கல்வித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


## நேரம் — ஒருவளம்

எந்தவொரு மனிதனதும் ஒரு நாள் என்பதை 24 மணித்தியாலங்களாக நோக்குவதும் பயன்படுத்த முயல்வதும் வழக்கமாகும். ஆசிரியரது நோக்கில் இந்த 24 மணித்தியாலங்களை பாடசாலையிலும் வீட்டிலும், சமூகத்திலும் செலவிட வேண்டியுள்ளது. அதாவது பின்வரும் தேவைகள், கடமைகள் தொடர்பாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

* தனிப்பட்ட தேவைகள் — உணவு, சுத்தம், ஓய்வு, மகிழ்ச்சி கௌரவம் போன்ற தேவைகளை நிறைவு செய்தல்.

* குடும்ப மட்ட தேவைகள் — தாய், மனைவி சகோதரர், மக்கள் சார்ந்த தேவைகளை நிறைவு செய்தல் இது குடும்பத்தலைவர் என்ற நிலையில் அல்லது வீட்டின் பங்காளர் என்ற ரீதியில் நிறைவேற்றப்படவேண்டியவை.

  இவை தனிப்பட்ட ரீதியிலான வசதிகள், மதிப்பு, பாதுகாப்பு என்பவற்றுடனும் மறைமுகமாகத் தொடர்புடையவை என்பதால் இவையும் முக்கியமானவை

* பாடசாலை மட்ட தேவைகள் — தொழில், வருமானம், என்றவகையில் இவை முதன்மையானவை எனினும் தனிப்பட்ட மகிழ்ச்சி, மரியாதை, நற்பெயர், என்பவற்றுக்கும் இவை அடிப்படையாக இருப்பதால் இவற்றையும் புறக்கணிக்க முடியாது.

* சமூகமட்டத் தேவைகள் — சமூகத்தின் அங்கத்தவர், சமூகத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்தவல்லவர், சமூக பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்

என்ற வகையில் ஆசிரியர் இத்தேவைகளில் அதிக ஈடுபாடும் கவனமும் செலுத்த வேண்டும். சமூக நிறுவனங்கள், சமூக கொண்டாட்டங்கள், சமூக செயன்முறைகள், சமூக நெருக்கடிகளுக்கான தீர்வு நடவடிக்கைகள் போன்ற பலவற்றிலும் தம் பங்கினை ஆற்றவேண்டுமென்பதை இது குறிப்பிடுகின்றது.

இத்தகைய எல்லாவகையிலுமான தேவைகளை நிறைவேற்றுவதற்கு பல்வேறு வளங்கள் இயலுமைகள் அவசியமாகின்றன. சொத்துக்கள், முதி பணவருமானம், துணை ஆட்கள், நற் பெயர் நல்ல தொடர்புகள் என்பவற்றோடு போதியளவு நேரமும் தேவைப்படுகிறது. இந்த வகையில் பொருளியலாளரும், முகாமைத்துவ நிபுணர்களும் நேரம் என்பது மனிதனின் பல்வகைப்பட்ட தேவைகளையும் நிறைவேற்றும் ஆற்றல் கொண்ட வளமாகவே நேரத்தை நோக்குகின்றனர். வளம் என்பதால் ஆசிரியர் நேரம் தொடர்பாக பின்வருவன பற்றிப் பரிசீலித்தல் அவசியம்.

**எந்த ஒரு ஆசிரியரும் நாளாந்தம் தனது நேரம் எவ்வாறு பயன் படுத்தப்பட்டது என்பதை மதிப் பீடு செய்ய வேண்டும். இது உணவு உண்பது போல, உறங் குவது போல வாழ்வுச் செய் முறையின் பிரிக்க முடியாத செயலாகி விடவேண்டும். தனது திட்டத்தின் செயற்பாடுகள் எவ்வாறு, எந்தளவு நிறைவான முறையில் பூர்த்தி செய்யப்பட்டன என்று பரிசீலனை செய்ய வேண் டும். இதேமுறையில் வாராந்தமும் மாதாந்தமும் மதிப்பீடு செய்து பார்த்தல் வேண்டும். வருடத்தின் இறுதி வாரத்தில் கடந்து போன ஐம்பத்தியொரு வாரங்களிலான நேரப் பயன்பாடு பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும்.**

1) **நேரத்தை உருவாக்குதல்:-** தனது தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக - நேரத்தை உருவாக்கிக் கொள்ளுதல். மகோன்னதமான சாதனை படைத்தவர்களுக்கும் ஒரு நாளில் 24 மணித்தியாலங்களே இருந்தன என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

2) **நேரத்தைத் திட்டமிடல்:-** தனது குறுங்காலமற்றும் நீண்டகால தேவைகளை சிந்தித்து, தெரிவு செய்து, ஒழுங்குபடுத்திக் கொள்வதில் இதில் முதல் நிலையாகும். அவை ஒவ்வொன்றுக்கும் உத்தேசமாக தேவைப்படக்கூடிய மணித்தியாலங்களைக் கணித்துக் கொள்வது இரண்டாவது நிலையாகும். தேவைகளையும் கிடைக்கும் நேரத்தையும் பொருத்தமாக இணங்கச் செய்வது மூன்றாவது நிலையாகும். அவ்வாறு இணங்கச் செய்யும் முறையை விஞ்ஞான பூர்வமாக - நிதானமாக - எதிர்கால நோக்குடன் மேற்கொள்ளும் போது அது நேரத்திட்டமிடலாகும். இதில் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

3) **நேர முகாமைத்துவம்:-** தீர்மானிக்கப்பட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு நேரத்தைப் பயன்படுத்துவதற்கான அனைத்து அம்சங்களையும் ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல், கண்காணித்தல், வழிப்படுத்துதல் இதில் முக்கியமானது. ஆசிரியர் சுய கட்டுப்பாடு உடையவராயுள்ள நிலையிலும் தனது இலக்கு அடையவேண்டிய குறிக்கோள் தொடர்பாக தெளிவான தீர்மானங்கள் கொண்ட நிலையிலுமே நேர முகாமைத்துவம் நடைமுறைச் சாத்தியமாகிறது. ஆசைப்படுவது எளிது; ஆனால் நிறைவேற்றி முடிப்பது கடினம். சீரான முகாமைத்துவத்தினாலேயே இது சாத்தியமாகும்.

ஆசிரியர் தன்னளவில் சுயகட்டுப்பாடு கொண்டிருப்பதும், தனக்குகிடைக்கும் பௌதிக, நிதி வளங்களில் கட்டுப்பாடு கொண்டிருப்பதும், தன் சூழல் மீது மேலாதிக்கம் கொண்டிருப்பதும், தனக்கு உதவக்கூடிய நபர்களிடையில் நன்மதிப்பை வளர்த்துக் கொள்வதும் நேர முகாமைத்துவத்திற்கு அடிப்படை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

4) **நேரப் பயன்பாடு பற்றிய மதிப்பீடு:-** எந்த ஒரு ஆசிரியரும் நாளாந்தம் தனது நேரம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை மதிப்பீடு செய்ய வேண்டும். இது உணவு உண்பது போல, உறங்குவது போல வாழ்வுச் செய்முறையின் பிரிக்க முடியாத செயலாகி விடவேண்டும். தனது திட்டத்தின் செயற்பாடுகள் எவ்வாறு, எந்தளவு நிறைவான முறையில் பூர்த்தி செய்யப்பட்டன என்று பரிசீலனை செய்ய வேண்டும். இதேமுறையில் வாராந்தமும் மாதாந்தமும் மதிப்பீடு செய்து பார்த்தல் வேண்டும். வருடத்தின் இறுதி வாரத்தில் கடந்து போன ஐம்பத்தியொரு வாரங்களிலான நேரப் பயன்பாடு பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும். அவை தொடர்பான பரிசீலனையின் போது பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

i) செய்ய வேண்டிய வேலைகள், அவற்றுக்குட்பட்ட நடவடிக்கைகளின் தெரிவில் தவறுகள், பொருத்தப்பாடின்மைகள் இருந்தனவா என பரிசீலித்தல்

ii) ஒவ்வொரு வேலைக்குமான நேர ஒதுக்கீட்டு ஏற்பாடு திருப்திகரமானதா? அவை தொடர்பாக யாதேனும் குறைபாடுகள் இருந்தனவா என பரிசீலனை செய்தல்.

iii) வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டவை எவை? அதற்கு பெருமளவு பங்களிப்புச் செய்த செயல், அணுகுமுறை அல்லது நுட்பம் யாது? அதற்கு ஆசிரியரிடம் காணப்பட்ட சிறப்பார்ந்த அறிவு அல்லது ஆற்றல் ஏதேனும் உதவியதா? அவ்வாறு உதவியிருந்தால் அதனை தரமுயர்த்துவது சாத்தியமா? அதற்கு எடுக்க வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் யாவை? என்பன போன்ற வினாக்-

களைக் கேட்டு அதற்கான விடைகளைத் தேடு-தல்.

iv) சில வேலைகள், நடவடிக்கைகள் நிறைவேற்றப்-படாமல் கைவிடப்பட்டிருக்கலாம்; சில அரை-குறையாக நிறைவேற்றப்பட்டிருக்கலாம்; சில மிகவும் கால தாமதமாகி நிறைவேற்றப்பட்டிருக்-கலாம். இவ்வாறு பாதிக்கப்பட்ட நடவடிக்-கையின் முக்கியத்துவம் யாது? பாதிக்கப்பட்ட-தால் ஏற்பட்ட நட்டம் அல்லது இழப்பு யாது? அவை குறுங்கால பாதிப்பை ஏற்படுத்த வல்ல-னவா? அல்லது நீண்டகால பாதிப்பை எற்படுத்த வல்லனவா?

இத்தகைய தவறுகளுக்கு பொறுப்பாக இருந்த நபர், சூழல், தடைகள் பற்றி தெளிவாக சிந்தித்து இனங்காணல் அவசியமாகிறது. இவற்றை ஒரு அனுபவமாக - பாடமாக - பின்பற்றுதற்கான வழிகாட்டு நெறியாக உணர்ந்து மனதில் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

இத்தகைய நான்குபடி முறைகளிலும் கூடிய கவனம் செலுத்துவதாலேயே நேரம் ஆசிரியருக்கு நன்மை தரும் வளமாக பயன்பட முடியும்.

## நேரப்பயன்பாட்டுக்கான செயன்முறைத் திட்டம்

ஆசிரியர் ஒவ்வொருவரும் தமக்-குக் கிடைக்கும் மணித்தியாலங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் விளைதிறன் மிக்கதாகவும் பயன்படுத்-திக் கொள்ள வேண்டுமானால் நேரம் பற்றிய தெளிவான எண்ணக்கருவை விளங்கிக் கொள்வதும் அதனை ஒழுங்காக திட்டமிட்டு, கவனமாகப் பயன்படுத்துவதும் அவசியமாகும்.

ஒருநாள் என்பது பொருளியல் கருத்துப்படி 8 மனித மணித்தியாலங்-கள் எனப்படுகிறது; ஒரு நாள் வேலை செய்தல் என்பது குறைந்தது எட்டு மணித்தியாலங்கள் ஏதேனும் உற்பத்-திச் செய்முறைக்கு உதவுவதற்கு மனித உடல், மூளை உழைப்பை வழங்-குவதன் மூலம் தனக்குரிய தொழில் வாய்ப்பைப் பயன்படுத்தி வருமானம் பெறுவது என்பதாகும்.

இங்கு மனித மணித்தியாலம் என்ற எண்ணக்கரு, உழைப்பு, உற்-பத்தி, வருமானம் என்பவற்றை ஒன்-றிணைந்த வகையில் விளக்க முயல்-கின்றது. தற்போது உலகம் முழுவதும் இந்த வேலைக்கான மணித்தி-யாலங்கள் பற்றிய கருத்தும் அணுகுமுறையும் பல நிலை-களில் மாற்றமடைந்துள்ளது.

பாடசாலைகள் பொதுவாக வருடமொன்றுக்கு சரா-சரியாக 200 நாட்கள்செயற்படுகின்றபோது நாள் ஒன்றுக்கு சராசரியாக ஆறு மணித்தியாலங்களே கற்றல் - கற்பித்த-லுக்கான நேரமாக அமையுமிடத்து வருடமொன்றுக்கான ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்ற பணிக்குரிய நேரமாக அயிரத்து இருநூறு மணித்தியாலங்கள் விளங்குகின்றன.

இந்த நிலையில் ஆசிரியரைப் பொறுத்து பின்வரும் முடிவுகள் எடுப்பது முக்கியமாகின்றது.

1) பாடசாலைப் பணிக்கான மணித்தியாலங்களை எவ்வாறு கற்பித்தல், புறப் பாடத்திட்டச் செயற்பாடுகள், பாட-சாலை நிர்வாகத்திற்கான துணைச் செயற்பாடுகள், பாடசாலை - சமூக தொடர்புகள் சார்ந்த செயற்பாடுகள் என்பற்றுக்கு வினைத்திறனுடைய முறையில் எவ்வாறு ஒதுக்கீடு செய்வது? இதில் ஆசிரியர் மகிழ்ச்சி, உடல் ஆரோக்கியம் முன்னேற்றம் என்பன பேணத்தக்க முறை-யில் மாணவர் கல்வி, ஆளுமை விருத்தி, பாடசாலையில் விரும்பத்தக்க சூழல், இணக்கமான சமூகத் தொடர்பு என்பவற்றை முன்னேற்றுவதற்கான வழி முறைகள் யாவை?என்பன போன்ற கேள்விகளுக்கு திருப்திகரமான விடைகளைக் கண்டறிய வேண்டும்.

2) பாடசாலை தொழிற்படாத மிகுதி 165 நாட்கள் எவ்வாறு தனது சுய முன்னேற்றம், தனது மகிழ்ச்சிகரமான ஓய்வு முறை, குடும்ப அங்கத்தவரின் மகிழ்ச்சி மற்றும் முன்-னேற்றம் என்பவற்றுக்கு எவ்வாறு ஒதுக்கீடு செய்வதென்பதும் முக்கி-யத்துவமுடையது.

* தனது பொருளாதார வசதிகளை-யும், பண வருமானத்தையும் அதி-கரிப்பதற்கு நேரத்தை ஒதுக்கீடு செய்தல் வேண்டும். விவசாய சிறு-வியாபாரம் போன்ற முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

* தனது கற்பித்தல் பணியை திருப்தி-கரமாக மேற்கொள்வதற்கான ஆயத்தங்களைச்செய்தலும் முக்-கியம். நுலகங்களைப் பயன்படுத்-தல், தேவையான நூல்கள், குறிப்-புக்கள் மற்றும் துணைச் சாதனங்-களைச் சேகரித்தல், சக ஆசிரியர்-களுடன் கலந்துரையாடி தனது வேலையை எளிதாக அதேசமயம் விளைதிறன் மிக்கதாக மாற்றி-யமைத்தல், கல்விசார் கருத்தரங்கு-கள், செயலமர்வுகளில் பங்குபற்றல் போன்ற நடடிவடிக்கைகளை பயன்-படுத்திக் கொள்ள வேண்டும்.

**பாடசாலைப் பணிக்கான மணித்தியாலங்களை எவ்வாறு கற்பித்தல், புறக்கலைத்திட்டச் செயற்பாடுகள், பாடசாலை நிர்வாகத்திற்கான துணைச் செயற்பாடுகள், பாடசாலை — சமூக தொடர்புகள் சார்ந்த செயற்பாடுகள் என்பற்றுக்கு வினைத்திறனுடைய முறையில் எவ்வாறு ஒதுக்கீடு செய்வது? இதில் ஆசிரியர் மகிழ்ச்சி, உடல் ஆரோக்கியம் முன்னேற்றம் என்பன பேணத்தக்க முறையில் மாணவர் கல்வி, ஆளுமை விருத்தி, பாடசாலையில் விரும்பத்தக்க சூழல், இணக்கமான சமூகத் தொடர்பு என்பவற்றை முன்னேற்றுவதற்கான வழிமுறைகள் யாவை? என்பன போன்ற கேள்விகளுக்கு திருப்திகரமான விடைகளைக் கண்டறிய வேண்டும்.**

* தனது தொழிலை வளம்படுத்துவதற்கான துணைச் செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும் அதற்கு உதவக்கூடிய நபர்கள், நிறுவனங்கள் என்போருடன் நல்ல தொடர்புகளை உருவாக்கவும் நன்மதிப்பை விருத்திசெய்யவும் முயற்சித்தல் வேண்டும்.

குறிப்பாக தேசிய மட்டப் பரீட்சைகள் நடாத்துவதற்கு உரிய பணிகளில் ஈடுபடலாம். பரீட்சை நிலையங்களில் மேற்பார்வையாளர் மற்றும் கண்காணிப்பாளராக பணியாற்றுவதால் பணவருமானம் கிடைப்பதுடன் தொழில்சார் அனுபவங்களையும் கற்றுக்கொள்ள முடியும்.ஒய்வு நாட்களில் ஏற்படக்கூடிய வீண் செலவுகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும். இதேபோல் விடைத்தாள் திருத்தும் பணியிலும் ஈடுபடல், அதற்கான தொடர்பாடல்களை கவனமாக மேற்கொள்ளுதல் என்பவற்றுக்கும் திட்டமிட்ட வகையில் நேரத்தை ஒதுக்கீடு செய்தல் அவசியம்.

குடும்பத்தில் மனைவி, மக்களுடன் ஓய்வாக இருந்து கருத்துப் பரிமாறுவதற்கு சில நாட்களையும், தினமும் சில மணி நேரங்களையும் கட்டாயம் செலவிட வேண்டும். சில குடும்பங்களில் கணவன் மனைவி இருவரும் வேலை செய்யும் நிலையில், ஓய்வாக உரையாட விடுமுறை நாட்களை கவனமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். திட்டமிட்டு சிறிதளவு பணத்தையும் ஒதுக்கி மனைவி பிள்ளைகள் ஆகியோருடன் குறுகிய சுற்றுலாக்களை மேற்கொள்ளலாம். உறவினரையும் கோவில்களையும் தரிசிக்கச் செல்லலாம். சற்றுத் தொலை தூர சுற்றுலாத் தலங்களுக்கு அல்லது மகிழ்ச்சிகரமான விழாக்களுக்கு அழைத்துச் செல்வதற்கு விடுமுறை நாட்களை ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

* தனது சம்பள நிலுவை, சம்பள அளவுத் திட்ட மாற்றம், சிக்கன சங்கங்களில் கடனுதவி பெறல் போன்ற வேலைகளையும் விடுமுறை நாட்களில் திட்டமிட்டு செய்தல். இது மன அழுத்தங்களைக் குறைக்க உதவும். வேலை நாட்களில் பரபரப்புடன் கல்வி அலுவலகங்களுக்கு அலைவதைத் தவிர்த்துக் கொள்வதும் விரும்பத்தக்கது.

* தொழிற்சங்கங்களுடன் தொடர்பு கொண்டு தொழில் சார்ந்த சட்டப் பாதுகாப்பு முறைகள், பெறக்கூடிய அனுகூலங்கள் என்பன பற்றிய விபரங்களைப் பெறுவதற்கும் விடுமுறை நாட்களைப் பயன்படுத்த வேண்டும். தொழிற்சங்கங்களுடன் இணக்கமான தொடர்புகளுக்கான நேர ஒதுக்கீடு செய்தல் தொழில் சார் நலன்களை உறுதிப்படுத்துவதாகவும் விளங்கும். இதில் போதியளவு கவனம்செலுத்த வேண்டும்.

* குடும்பத்தில் மனைவி, மக்களுடன் ஓய்வாக இருந்து கருத்துப் பரிமாறுவதற்கு சில நாட்களையும், தினமும் சில மணி நேரங்களையும் கட்டாயம் செலவிட வேண்டும். சில குடும்பங்களில் கணவன் மனைவி இருவரும் வேலை செய்யும் நிலையில், ஓய்வாக உரையாட விடுமுறை நாட்களை கவனமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். திட்டமிட்டு சிறிதளவு பணத்தையும் ஒதுக்கி மனைவி; பிள்ளைகள் ஆகியோருடன் குறுகிய சுற்றுலாக்களை மேற்கொள்ளலாம். உறவினரையும் கோவில்களையும் தரிசிக்கச்செல்லலாம். சற்றுத் தொலை தூர சுற்றுலாத் தலங்களுக்கு அல்லது மகிழ்ச்சிகரமான விழாக்களுக்கு அழைத்துச் செல்வதற்கு விடுமுறை நாட்களை ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும். இது ஆசிரியர் உழைப்பாற்றலை மேலுயர்த்தும்; குடும்ப அங்கத்தவரிடையே பரஸ்பர நல்லுணர்வு நம்பிக்கை என்பவற்றை மேம்படுத்தும். குடும்ப வாழ்வின் மகிழ்ச்சியையும் கட்டுக் கோப்பையும் இது உறுதிப்படுத்தும். இதற்கு திட்டமிட்டு சில நாட்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற் கூறியவையனைத்தும் பலருக்கும் தெரிந்தது போல் தெரியும். நடைமுறையில் அதிக விடுமுறை நாட்கள் கொண்ட ஆசிரியர்களால் தான் இத்தகைய அனுகூலங்களை அனுபவிக்க முடியும். எனினும் பெரும்பாலானவர்கள் இதனை சரியாக பயன்படுத்துவதுமில்லை; இதன் பயன்களைப் பெற்றதுமில்லை.

## நேரமுகாமை நுட்பங்கள்

ஒருநாள்,ஒருவாரம், ஒருமாதம், ஒருவருடம் போன்ற எந்த ஒரு காலத்தையும் உச்ச பயனும் மகிழ்ச்சியும் தரத்தக்கதாக பயன்படுத்த வேண்டுமாயின் சரியான நுட்ப முறைகளைக் கையாள வேண்டுமென முகாமைத்துவ வியலாளர் வற்புறுத்துகின்றனர். நேரத்தைப் பயன்படுத்தும் நுட்பங்களை ஆசிரியர்கள் சரியாகக் கையாளுமிடத்து சூழலையும், உங்களைச் சுற்றியுள்ள மனிதர்களையும், நிகழ்வுகளையும் நீங்கள் நோக்கும் முறையில் - கண்ணோட்டத்தில் மிகப் பெரிய மாற்றத்தைக் காண முடியும்.

மற்றவர்களும் உங்களை நோக்கும் முறையிலும் சாதகமான, விரும்பத்தக்க மாற்றம் ஏற்படும். இதனால் பின்வருவனவற்றை விளங்கிக்கொள்வதும் அவற்றை நடைமுறையில் பின்பற்றுவதும் அவசியமாகின்றது.

1) தற்போது உங்கள்ஒரு நாளில் என்ன செய்கிறீர்கள்? எத்தனை மணி நேரம் உண்மையாக வேலை செய்கிறீர்கள்? எத்தனை மணி நேரம் பயன்மிக்க மகிழ்ச்சிகரமான தீமை ஏற்படுத்தாத ஓய்வில் செலவிடுகிறீர்கள்? இக்கேள்விகளை நீங்களே உங்களுக்குள் கேட்டுப் பாருங்கள். உங்களுக்கு எத்தகைய விடை கிடைக்கிறது. அத்தகைய விடையில் நீங்கள் திருப்தியடைகின்றீர்களா? இது ஒரு சுய பரீட்சை; சுய மதிப்பீடு.

ஒரு நாட்குறிப்பு அல்லது கையேடு அல்லது வாராந்த திட்டத்திற்கான குறிப்பு போன்ற ஏதேனும் ஒன்றை எடுத்து, ஒருவாரம் ஒன்றுக்கு எவ்வாறு செயல்படு-

கிறீர்கள் என்பதை மணித்தியாலங்களில் பதிவு செய்யுங்கள். நீங்கள் செயல்படும்முறையை எழுத்தில் திட்டவட்டமாகப் பதிந்து பாருங்கள். இது சுலபமானது போல் தென்படும்; ஆனால் தொடக்கத்தில் கடினமானது. அவ்வாறு எழுதி முடிப்பீர்களானால் நீங்களே அதைப்பார்த்து ஆச்சரியம் அடைவீர்கள்.

2) குறிப்பேட்டில் உங்கள் வாரத்திற்கான (எதிர்வரும்) வேலையைக் கவனமாகத் திட்டமிடுங்கள். நித்திரைக்கு செலவிடும் நேரத்தைக் கணித்துப்பாருங்கள். ஒரு நாள்ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள் நித்திரை செய்பவராயின் வார மொன்றுக்கு ஐம்பத்தியாறு மணித்தியாலங்களை செலவிட்டு விடுவீர்கள். அது பயன்படுத்துவதற்கு உங்களது கையில் உள்ள மனித மணித்தியாலங்கள் தான் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

மிகுதி நூற்றுப்பன்னிரண்டு மணித்தியாலங்கள் வேலைக்காக உள்ளன என்பதை அடுத்து எண்ணிப் பாருங்கள். இதனை முன்பு விபரித்ததுபோல பல்வேறு தேவைகளுக்கும் பங்கீடு செய்ய வேண்டும். இந்த வேலைக்கான மணித்தியாலங்களை உங்கள் பல்வேறு பட்ட தேவைகளுக்கும் முன்னுரிமையின்படி ஒதுக்கீடு செய்யுங்கள். முன்னுரிமைகள் சரியானவைதானா என்பதை பரிசீலித்து உறுதிப்படுத்துங்கள்.

இதனை தெளிவாகத் தீர்மானிக்க முடியாது திண்டாடுவீர்களேயானால் பின்வரும் நெருக்கடிகளுக்கு உட்படுவீர்கள்.

* கடைசி நேரம் வரை வேலைகளைத் தள்ளிப் போடுவீர்கள்.
* முழுமையாகவே அதனை நிறைவேற்றாமல் விட்டு விடுவீர்கள்
* செய்யாமல் விடுவதற்கு விடுபட்டமைக்கு நீங்களாகவே பொய்யான காரணத்தை போலிநியாயத்தைக் கற்பிதம் செய்து கொள்வீர்கள்.

இவை அனைத்துமே ஆசிரியராகிய உங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய நன்மைகளை இல்லாமற் செய்வனதான் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

3) நேரத்தை-வாரமொன்றுக்கு திட்டமிட்டிருப்பின் அதன் பின் உங்கள் திட்டத்துள்வராத வேலைகள் எதுவாயினும் அதற்கு இல்லை - இயலாது என மறுத்துரைக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இவ்வாறு இல்லையென்பது உங்களை மற்றவர்கள் நிராகரிப்பதற்குக் காரணமாகிவிடும் என்று எண்ணாதீர்கள். உங்கள் திட்டத்தில் நீங்கள் தெளிவாக இருப்பது பற்றி நீண்ட காலத்தில் உங்கள் மீது நிச்சயமாக நல்லெண்ணம் ஏற்படும்.

4) வேண்டாத தொலைபேசி அழைப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் பணியிலிருக்கும் போது தொலைபேசி அழைப்புக்களை ஏற்பதில்லை என்ற முடிவுக்கு வந்து, உங்கள் குடும்பத்தவரிடமும் அதனை தெளிவுபடுத்தி விடுங்கள். அவர்கள் உங்களைக் காப்பாற்றுவார்கள். மிகவும் அவசரமான தேவையெனில் அவர்கள் தாமாகவே இரண்டாம் முறை அழைப்பர். அப்போது அதற்கு மதிப்பளித்தால் போதுமானது.

5) மாதாந்த கலண்டர் ஒன்றைப் பயன்படுத்தி பலவாரங்களுக்குமுரியதான உங்கள் வேலைத்திட்டத்தை (Work Schedule) ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு தவணைக்குமுரியதாக திட்டமிடுங்கள். ஒரு தவணைக்குரிய வாரங்களில் உங்கள் வழமையான வேலை, பிரத்தியேகவேலை, பயணங்கள்,வங்கிப் பணிகள், சமூக தொடர்புப்பணிகள் போன்றவற்றை மிகவும் கவனமாக பரிசீலித்து திட்டமிட்டு குறித்து வைத்துக் கொள்ளுங்கள். கலண்டர் உதவியுடன் மிகவும் முக்கிய தினங்களையும் திகதிகளையும் உங்கள் நாட்குறிப்பில் அல்லது குறிப்பேட்டில் பதிந்து வைத்துக் கொள்ளுங்கள். பரீட்சை நாட்கள், வலய, கோட்ட நிர்வாக அணியினரின் மேற்பார்வை நாட்கள், வங்கி, காப்புறுதி நிறுவனங்களுக்கு செல்ல வேண்டிய நாட்கள்,பாடசாலை தொடர்பான அவசிய நாட்கள் என்பவற்றைக் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். இவற்றுக்கு உமக்கு தேவைப்படும் நாட்களையும் கணித்து, அவற்றையும் குறித்துவையுங்கள்.

6) தீர்மானித்தவற்றை இயன்றளவு முதலிலேயே நிறைவேற்றப்பழகிக் கொள்ள வேண்டும். கடைசித் தினங்கள் வரை ஒத்திப்போடுதல் பாதகமானது. பரபரப்பும், கோபமும் வேண்டாத மன அழுத்தங்களுக்கும் உட்படவேண்டிவரும். பணியும் நிறைவானதாக அமைய மாட்டாது. உரிய காலத்திற்கு முன்னரே வேலைகளைச் செய்யும் பழக்கத்தை வாழ்வின் நெறிமுறையாக - கலாசாரமாக வளர்த்தெடுத்துக் கொள்வது மிகவும் அவசியமானது.

7) எந்த ஒரு வேலையையும் செய்யும் போது, இடைக்கிடையே சிறிது

**மாதாந்த கலண்டர் ஒன்றைப் பயன்படுத்தி பலவாரங்களுக்கும் உரியதான உங்கள். வேலைத்திட்டத்தை (Work Schedule) ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு தவணைக்குமுரியதாக திட்டமிடுங்கள். ஒரு தவணைக்குரிய வாரங்களில் உங்கள் வழமையான வேலை, பிரத்தியேக வேலை, பயணங்கள், வங்கிப் பணிகள், சமூக தொடர்புப் பணிகள் போன்றவற்றை மிகவும் கவனமாக பரிசீலித்து திட்டமிட்டு குறித்து வைத்துக் கொள்ளுங்கள். கலண்டர் உதவியுடன் மிகவும் முக்கிய தினங்களையும் திகதிகளையும் உங்கள் நாட்குறிப்பில் அல்லது குறிப்பேட்டில் பதிந்து வைத்துக் கொள்ளுங்கள்.**

நேரம் ஓய்வெடுத்துக்கொள்வது உங்கள் வினைத்திறனை அதிகரிக்க உதவும். அதேநேரம் அந்த ஓய்வு நேரத்தை சரியாக நிறுத்தி மீண்டும் பணியில் ஈடுபடும் பழக்கம் அவசியம். ஜப்பான் நாட்டில் தொழில் நிறுவனங்களில் தொழில் புரியும் பணியாளர்களின் வினைத் திறனையும், தொழில் ஈடுபாட்டையும் அதிகரிப்பதற்கு இவ்வாறு ஊக்கமளிக்கும் குறுகிய ஓய்வு நேர ஏற்பாடும் அணுகுமுறையும் கவனமாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய நுட்பங்களை விளங்கிக் கொண்டு படிப்படியாக, கவனமாக கையாண்டுவருவதால் நேர முகாமைத்துவத்தின் எல்லா நன்மைகளையும் ஆசிரியர்கள் முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

எந்த ஒரு வேலையையும் செய்யும் போது, இடைக்கிடையே சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொள்வது உங்கள் வினைத்திறனை அதிகரிக்க உதவும். அதேநேரம் அந்த ஓய்வு நேரத்தை சரியாக நிறுத்தி மீண்டும் பணியில் ஈடுபடும் பழக்கம் அவசியம். ஜப்பான் நாட்டில் தொழில் நிறுவனங்களில் தொழில் புரியும்பணியாளர்களின் வினைத் திறனையும், தொழில் ஈடுபாட்டையும் அதிகரிப்பதற்கு இவ்வாறு ஊக்கமளிக்கும் குறுகிய ஓய்வு நேர ஏற்பாடும் அணுகுமுறையும் கவனமாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## முடிவுரை

இத்தகைய நேர முகாமைத்துவம் பற்றிய எண்ணக்கரு, நடைமுறை, அணுகுமுறை மற்றும் நுட்பங்களை பாடசாலை ஆசிரியர்கள் மட்டுமன்றி பாடசாலை நிர்வாகம் மற்றும் பாடசாலை முகாமைத்துவத்திலும் ஈடுபடுவோரும், விளங்கிக் கையாளுமிடத்து பாடசாலை என்றநிறுவனம் முழுமையாகவே வினைத்திறனும்,விளைதிறனும் மிக்கதாக விளங்கும். பாடசாலையின் பௌதிக, நிதி மற்றும் மனிதவளம் தொடர்பாக விரயங்கள் ஏற்படுவதையும் தவிர்த்துக்கொள்ள முடியும்.

ஆசிரியர்கள் நடத்தையில் செம்மையும், ஆற்றலும் துலங்கும். இதனால் மனித உறவுகளில் இணக்கமான சூழ்நிலை விருத்தியடையும்; நட்புணர்வு வளரும்; பாடசாலை மகிழ்ச்சியும் உயர்விழுமியங்களும் கொண்ட இடமாக சமூகத்தினாலும், உயர் மட்ட கல்வி அமைச்சினாலும் இனங்காணப்பட்டு உரியவாறு மதிப்பும் உதவிகளும் அளிக்கப்படும்.

இதனால் ஆசிரியர்களிடம் நேரமுகாமைத்துவத் திறன்களை வளர்ப்பதில் ஆசிரியர் கல்வி நிறுவனங்களும், கல்வி நிர்வாகிகளும், தொழிற்சங்கங்களும், பெற்றோர், பழைய மாணவர் சங்கங்களும் ஒன்றிணைந்து ஆர்வம் காட்ட வேண்டும்; அவர்களை ஊக்குவிப்பதற்கான உபாயங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆசிரியர்களை முழுமையான வாண்மைத் துறையினராகவும் பாடசாலைகளை வினைத்திறனும் விளைதிறனும் மிக்கனவாகவும் மாற்றியமைப்பதில் "நேர முகாமைத்துவம்" முக்கியமான பங்குவகிப்பது பாடசாலைப் பொறுப்புமிக்கவர்களினால் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**Referance:**

1) Lynn Underwood MasteringTime Management In ficity Books, New Delhi.

2) Everard and morris, Gewffrey (1991) Exectre Sche

❑

தெற்கு ஆசியாவில் மட்டும்தான் பல்கலைக்கழகங்கள் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு தேர்வு நடத்தும் முறை இருக்கிறது. உலகில் வேறு எங்கேயும் இத்தகையத் தேர்வுமுறை கிடையாது. கற்றுக் கொடுக்கும் அந்தந்த ஆசிரியர்கள் தான் மாணவர்களை மதிப்பீடு செய்கிறார்கள். ஒவ்வொரு நிறுவனத்தையும் பொறுத்து மதிப்பீடுகள் செய்யும் முறை மாறுகிறது. சில மாதிரிகளைப் பின்பற்றுகிறார்கள். ஆனால் ஆசிரியர்கள்தான் தங்கள் வகுப்பு மாணவனை மதிப்பீடு செய்வார்கள். அவரைத் தவிர வேறு யாரும் மாணவனை மதிப்பிடுதல் கிடையாது. இதில் குறைபாடுகள் இருக்கிற மாதிரி எனக்குத் தெரியவில்லை. கேள்விகளைத் தேர்ந்தெடுத்து அதற்கான பதில்களை உருப்போட்டுப் படித்துவிட்டுப் போனால் போதுமானது என்ற மனப்பான்மை தேர்வுமுறையில் உருவாகிறது. ஒரு ஆசிரியர் கற்றுத் தருகிறார். வேறு யாரோ ஒருவர் கேள்விகளைத் தயார் செய்கிறார். அதனை வேறு யாரோ ஒருவர் மதிப்பீடு செய்கிறார். இப்படி ஒரு முறை இங்கு இருக்கிறது என்று வெளிநாட்டில் சொன்னால் நம்பக்கூட மாட்டேன் என்கிறார்கள

"தமிழகத்தில் கல்வி" — வே. வசந்தி தேவியுடன் உரையாடல்

# ஆசிரியர் கல்வியும் பயிற்சியும்
# பாடசாலைகளில் அவற்றின் பயன்பாடும்

இலங்கையிலே கல்வி தொடர்பாக அண்மைக்காலங்களில் வெளிவரும் அறிக்கைகள், கல்வியின் தரமேம்பாட்டுக்கான அணுகுமுறைகளையும் உபாயங்களையும் முன்வைப்பதில் கூடுதலான கவனம் செலுத்தி வருகின்றன. பாட ஏற்பாட்டுச் சீர்திருத்தங்கள் கூடத் தர விருத்தியைக் கருத்திற் கொண்டே முன்மொழியப்படுகின்றன. புதிய மாறுதல்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் நோக்கில், ஆசிரியரின் தரமேம்பாடு முக்கியமானது எனக் கருதப்படும் பொழுது, ஆசிரியர் கல்வியும் ஆசிரியர் பயிற்சியும் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகைய முயற்சியிலே பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆயினும், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கல்வியும் பயிற்சியும் வகுப்பறைச் செயற்பாடுகளின் போது வினைத்திறனுடன் பயன்படுகின்றதா என்ற விடயம் மாணவர், பெற்றோர் மற்றும் சமூகத்தின் மத்தியில் ஐயத்தினைத் தோற்றுவித்துள்ளது.

"ஆசிரியர்கள் கல்வி பற்றிய அடிப்படை அறிவு இன்றிப் பாடசாலைகளில் நியமிக்கப்படுதல் கூடாது" எனத் தேசிய கல்வி ஆணைக்குழு அண்மையில் பரிந்துரை செய்துள்ளது. ஆயினும் இத்தகைய அடிப்படைகள் நிறைவேற்றப்படாமலேயே பலர் ஆசிரியராக நியமிக்கப்படுகின்றமை இப்பொழுதும் தொடர்ந்து வருகின்றது. ஆசிரியர் தொழில் பிரதான வேலை வழங்கும் துறையாக கருதப்படுவதனால் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆசிரியர் நியமனஞ் சார்ந்த கொள்நெறிகள் அடிக்கடி மீறப்படுகின்றன. அதுமட்டுமன்றிச் சேவையிலுள்ள ஆசிரியர்கள் பலர் இன்னும் எவ்வித பயிற்சியுமின்றி வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். பின்வரும் அட்டவணை ஆசிரியர் பரம்பலைச் சதவீத அடிப்படையில் விளக்குகிறது.

**"ஆசிரியர்கள் கல்வி பற்றிய அடிப்படை அறிவு இன்றிப் பாடசாலைகளில் நியமிக்கப்படுதல் கூடாது" எனத் தேசிய கல்வி ஆணைக்குழு அண்மையில் பரிந்துரை செய்துள்ளது. ஆயினும் இத்தகைய அடிப்படைகள் நிறைவேற்றப் படாமலேயே பலர் ஆசிரியராக நியமிக்கப்படுகின்றமை இப்பொழுதும் தொடர்ந்து வருகின்றது. ஆசிரியர் தொழில் பிரதான வேலை வழங்கும் துறையாக கருதப்படுவதனால் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆசிரியர் நியமனஞ் சார்ந்த கொள்நெறிகள் அடிக்கடி மீறப்படுகின்றன. அதுமட்டுமன்றிச் சேவையிலுள்ள ஆசிரியர்கள் பலர் இன்னும் எவ்வித பயிற்சியுமின்றி வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர்.**

**ஆசிரியர் பரம்பல்**

| | 1997 | 2001 |
|---|---|---|
| பட்டதாரிகள் | 27.0% | 27.5% |
| பயிற்றப்பட்டோர் | 50.3% | 61.3% |
| சான்றிதழ் பெற்றோர் | 2.3% | 1.3% |
| ஏனையோர் | 7.4% | - |
| மொத்தம் | 100.0% | 100.0% |

இந்த அட்டவணையின் அடிப்படையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தொகை வெகுவாக அதிகரித்துள்ளதைக் காணலாம். 1997ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது சான்றிதழ் அற்ற ஆசிரியர் தொகையிலும் ஏனையோர் என்ற வகையிலும் உண்டான மாற்றங்கள் இங்கு கவனிக்கத்தக்கவை. இதனிடையே தமிழ்மொழிமூல ஆசிரியர் பரம்பலானது, இலங்கையிலுள்ள மொத்த ஆசிரியர் தொகையில் 18.5 சதவீதமாக உள்ளது. இவர்களிடையே பட்டதாரிகள் 3.4 சதவீதம். தமிழ் மொழிப் பாடசாலைகளில் மேற்கூறிய எல்லா வகையினரிலும் பற்றாக்குறை உண்டென்பது பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்கூறப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மைக்கால ஆசிரியர் நியமனங்களைப் பொறுத்தவரையில் 1990 களில் பொருத்தமான அடிப்படைகளுடன் அவை நிகழ்ந்தனவாயினும் பல்வேறு அழுத்தங்கள் கவனமாக, உரிய தகைமைகள் இல்லா-

**கலாநிதி. மா. கருணாநிதி**
கல்விப்பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்.

தோறும் சிறியளவில் நியமனம் பெற்றுக் கொண்டு இருக்கின்றனர். ஆசிரியர்களாக நியமனம் பெறுவோர் எல்லோரும் பட்டதாரிகளாக இருத்தல் வேண்டும் என்ற கொள்நெறி நடைமுறையில் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதில் நீண்டகாலமாகப் பல்கலைக்கழகங்களும் ஆசிரியர் கல்லூரிகளும் ஈடுபட்டுவந்துள்ளன. இதனை விடத் தேசிய கல்வி நிறுவகம் மிகப்பாரிய அளவிலே செயற்படுகின்றது. கடந்த ஒரு தசாப்தமாக, தேசிய கல்வியியற் கல்லூரிகளும் மிகவும் முனைப்போடு இம்முயற்சியில் இறங்கியுள்ளன. ஏறக்குறைய ஒரேதன்மையான இத்தகைய நிறுவனங்கள் வழங்கும் கல்வியிலும் பயிற்சியிலும் ஒத்தபோக்குகள் நிலவுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் விளைவாக தொழிண்மைத் தகைமை பெற்றோர் தொகை 84 சதவீதமாக அதிகரித்தது என்றும்; இன்றுள்ள மொத்த ஆசிரியர் தொகையில் உள்ள பட்டதாரிகளில் 16.5 சதவீதமானவரே தொழிண்மைத் தகைமையுடையோராக உள்ளனர். (NEC, 2002) இந்தத் தொகையில் மாவட்ட ரீதியிலான வேறுபாடுகளும் உண்டு. தென்மாகாணம், கண்டி மற்றும் குருனாகல் மாவட்டங்களில் பட்டதாரி ஆசிரியர்களின் விகிதம் கூடுதலாக இருக்கின்ற வேளையில் நுவரெலியா, அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் குறைவாகவும் 15 - 30% உள்ளனர். இதுகால வரையில் எவ்வித பயிற்சியும் பெறாதவர் தொகை 15 சதவீதமாக உள்ளது.

மேற்கூறிய நிலைமைகளிலே, ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்ற வேளையில், இதனை வழங்கும் நிறுவனங்கள் பல்வேறு பிரச்சினைகளின் மத்தியில் அதனை நிறைவேற்றிச் செல்கின்றன. ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் நவீன செல்நெறிகளுடன் பொருந்துகின்றன. புதிய கல்விச் சீர்திருத்தங்களில் கூறப்பட்ட பாட ஏற்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சிகளின் தரமேம்பாடு குறித்த சந்தேகங்கள் உண்டு.

ஆசிரியர் கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட கல்வியையும் பயிற்சியையும் மாணவர் மேம்பாடு கருதி, தொழிண்மைக்குரிய இயல்புகளுடன் வகுப்பறையில் பயன்படுத்தப்படுதல் குறைவு என்பது பரவலான அவதானமாகும். அவை பயன்தரு வகையில் பயன்படுத்தப்படுமானால், மாணவரின் அடைவுகளிலே செல்வாக்குச் செலுத்தும். வகுப்பறைச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஆர்வத்தோடு ஈடுபடுவார்கள். வகுப்பறை நிலைமைகளை உற்று நோக்கும்போது அநேகமான பாடசாலைகளில் வகுப்பறை மட்ட அடைவுகளிலும் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளிலும் வீழ்ச்சிப் போக்குக் காணப்படுகிறது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட ஆராய்ச்சி ஒன்றிலிருந்து பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளில் நிலவும் வினைத்திறன் குறைவு, மாணவரின் கல்வியடைவுகளைப் பாதித்துள்ளன. என்பதை வெளிப்படுத்துகின்றது. பாடசாலை மட்டக் கணிப்பீடுகள் மட்டுமன்றி, ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, கா.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் இவை பிரதிபலிக்கின்றன. மேலும் தற்பொழுது பரிந்துரை செய்யப்பட்டுள்ள பாட ஏற்பாடுகளின் வெற்றி மற்றும் தோல்விகூட ஆசிரியர் என்ற காரணியிலே பெரிதும் தங்கியிருக்கிறது என்பதையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

இலங்கையின் கல்வியிலே அடிப்படைக் கருத்துநிலை மாற்றங்கள் நிகழ்ந்து வரும் வேளையில், தொகைசார் அபிவிருத்தியின் மீது இருந்து வந்த முனைப்புகள் இப்பொழுது தரரீதியான அபிவிருத்தியின்பால் ஈர்க்கப்படுகின்றன. கடந்த காலங்களுடன் ஒப்பிடும்பொழுது பாடசாலைகளில் வளங்களும் அதிகரித்துள்ளன. ஆசிரியர்கள் முழுமனதோடும் அர்ப்பணிப்போடும் சேவையில் ஈடுபடவேண்டிய நிலைக்கு அவர்களைத் தள்ளியுள்ளன.

பயிற்சி பெறும் காலங்களிலே ஆசிரியர்கள் கல்விக் கோட்பாடுகள், கல்வி உளவியல், கற்பித்தல் முறைகள் மற்றும் மாணவர் மதிப்பீடு போன்ற விடயங்களைக் கற்றுக்கொள்கின்றனர். உள்ளகப் பயிற்சி பெறும் காலத்தில் இவ்வாறான விடயங்கள் வகுப்பறைக் கற்பித்தலின் போது வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே கற்பிக்கப்படுகின்றன. இச் செல்வாக்கினால், பயிற்சி பெறுங் காலங்களில் பாடங்களைத் திட்டமிடும் பொழுது தாம் கற்ற கோட்பாடுகளைப் பயன்படுத்திக் கற்பித்தல் முறைகளைத் திட்டமிடுகின்றனர். மாணவர்களை அறிந்து கொள்ளும் உளவியல் மற்றும் சமூகவியல் கொள்கைகளைப் பிரயோகிக்கின்றனர். இந்த உத்வேகம் பயிற்சிக்காலம் முடிவடைந்த பின் குறைந்து கொண்டு செல்கிறது. தனிப்பட்ட காரணிகளும் நிறுவனம் சார்ந்த காரணிகளும் ஆசிரியரின் இத்தகைய போக்கிற்குத் துணை போகின்றன. நாளாந்த வேலைச்சுமை அதிகரித்த நிலையில் பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள், அவையொவ்வொன்றுக்கும் உரிய திட்டமிடலை விரிவாக மேற்கொள்ளாவிட்டாலும் குறைந்த பட்ச ஆயத்தங்களையேனும் செய்யலாம். ஆயினும், பெரும்பாலானோர் இவ்

**இலங்கையின் கல்வியிலே அடிப்படைக் கருத்துநிலை மாற்றங்கள் நிகழ்ந்து வரும் வேளையில், தொகைசார் அபிவிருத்தியின் மீது இருந்து வந்த முனைப்புகள் இப்பொழுது தரரீதியான அபிவிருத்தியின்பால் ஈர்க்கப்படுகின்றன. கடந்த காலங்களுடன் ஒப்பிடும் பொழுது பாடசாலைகளில் வளங்களும் அதிகரித்துள்ளன. ஆசிரியர்கள் முழுமனதோடும் அர்ப்பணிப்போடும் சேவையில் ஈடுபட வேண்டிய நிலைக்கு அவர்களைத் தள்ளியுள்ளன.**

விடயத்தில் பராமுகமாகவே இருக்கின்றனர்.

மேலும் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் ஆசிரியர்கள் தாம் பெற்ற அனுபவங்களை அனுசரித்து, வகுப்பறையில் செயலாற்றுகின்றனர். இதற்கும் சில தடைகள் எழுகின்றன. புதிதாகப் பயின்ற விடயங்களைப் பின்பற்றிச் செயற்பட்டால், தாமும் அவ்வாறு செயற்பட வேண்டும் எனக் கருதும் ஆசிரியர்கள், புதியவர்களுக்கு ஆலோசனை வழங்குகின்றனர். இவை முரண்பாடான தொழில் மனப்பாங்குகளை உருவாக்குகின்றன; வகுப்பறைச் செயற்பாடுகளைச் சிதைக்கின்றன.

மாணவர்கள் பற்றி ஆசிரியர்கள் மேற்கொள்கின்ற முடிவுகள் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. நீண்டகாலச் சேவையும் அனுபவமும் கொண்ட ஆசிரியர்கள் கூட மாணவர்களைப் பார்த்த மாத்திரத்தில், அவர்களுடைய புறத்தோற்றத்தினைக் கொண்டு அவர்களை வகைப்படுத்தி வருகின்றனர். நீண்ட கால அவதானமும் அடிப்படைத் தகவல்களும் இன்றி மாணவர்களை வகைப்படுத்துவது, தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லும். இந்த மாணவன் படிக்க மாட்டான், இவனுடைய பெற்றோர் படிப்பறிவற்றவர்கள், கல்வி பற்றிப் பெற்றோருக்கு ஒன்றும் தெரியாது. இவன் வாழும் சூழல் சரியில்லை என்ற காரணங்கள் பலவற்றைக் கூறி மாணவர்களின் கல்வி சார் முயற்சிகளுக்குத் தடைபோடும் ஆசிரியர்களைப் பாடசாலைகளில் சாதாரணமாகக் காணலாம். இவ்வாறான முன்முடிவுகளுடன் வகுப்பறைக்குச் செல்லும் ஆசிரியர்கள் மாணவர்களைக் கவனிக்காமற் செயலாற்றுகின்றனர்.

**பயிற்சி பெறும் காலங்களிலே ஆசிரியர்கள் கல்விக் கோட்பாடுகள், கல்வி உளவியல், கற்பித்தல் முறைகள் மற்றும் மாணவர் மதிப்பீடு போன்ற விடயங்களைக் கற்றுக்கொள்கின்றனர். உள்ளகப் பயிற்சி பெறும் காலத்தில் இவ்வாறான விடயங்கள் வகுப் பறைக் கற்பித்தலின் போது வினைத் திறனுடன் பயன்படுத்தப் படுதல் வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே கற்பிக்கப்படுகின்றன. இச் செல்வாக்கினால், பயிற்சி பெறுங் காலங்களில் பாடங்களைத் திட்டமிடும் பொழுது தாம் கற்ற கோட்பாடுகளைப் பயன்படுத்திக் கற்பித்தல் முறைகளைத் திட்டமிடுகின்றனர்.**

வகுப்பறையில் மாணவர்களின் கட்டுப்பாடு சீர்குலையும் போது கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிப்புக்குள்ளாகின்றன. வகுப்பறைக் கட்டுப்பாடு மாணவர் சார்ந்த தனியாள்க் காரணிகள், பாடசாலைக் காரணிகள் மற்றும் சமூக - பொருளாதாரக் காரணிகளால் உருவாகின்றன. பாடசாலைகள் மீதான சமூகத்தின் குற்றச் சாட்டாக மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு குறைந்து செல்கிறது, வகுப்பறையில் ஆசிரியர் - மாணவர் உறவு குறைவு; கற்றல் -கற்பித்தல் பணிகள் ஆர்வத்துக்குரியதாக இல்லை என்பன அத்தகையவற்றுள் சில. இவற்றோடு ஆசிரியர் பேசுகின்ற முறை, அவருடைய உடை, மெய்ப்பாட்டசைவுகள், நடுவுநிலையுடன் செயற்படுதல், மகிழ்ச்சிகரமாக பேசுதல் என்னும் விடயங்களில் கவனம் செலுத்துவதில்லை. தேவையின்றி மாணவரைப் பேசுதல், அச்சுறுத்தல், சுயகட்டுப்பாட்டினை இழந்து பொருத்தமற்ற தண்டனையை வழங்குதல், நம்பிக்கை இழப்பு போன்றவற்றால் அநேகமான பாடசாலைகளில் ஆசிரியர்-மாணவரிடையிலான ஊடாட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் கற்றுக் கொண்ட உளவியல் மற்றும் தத்துவவியற் கோட்பாடுகள் வகுப்பறைகளில் பிரயோகிக்கப்படுவதாகத் தெரியவில்லை. மறுபுறத்தில், நேரந்தவறாது வகுப்பறைக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவரை நன்கு அறிந்த ஆசிரியர்கள், பாடங்களை திட்டமிட்டு ஒழுங்காகக் கற்பிக்கும் ஆசிரியர்கள், பிள்ளைகளை மதிக்கின்ற ஆசிரியர்கள், பெரிதும் மதிக்கப்படுகின்றார்கள். பாடசாலைக்கு ஒழுங்காக வந்து, நேரத்துக்கு வகுப்பறைக்குச் சென்று, கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களால் இலகுவாக வகுப்பறைக் கட்டுப்பாட்டினைப் பேண முடியும். இதிலிருந்து தவறும் பொழுதே ஆசிரியர்கள் மாணவர், மற்றும் பெற்றோர் சமூகத்தினால் விமர்சிக்கப்படுகின்றனர்.

நகர மற்றும் கிராமப்புறங்களில் பாடசாலைக்கு வருகை தரமறுக்கும் நடத்தைக் கோலமும், மாணவரிடையே உள்ளது. வருகையை மறுப்பதற்கான காரணங்களையும் மாணவர்கள் கூறுவதில்லை. வகுப்பறையில் அல்லது பாடசாலையில் இடம்பெறும் சில நிகழ்வுகளிலிருந்தே இவை உருவாகின்றன என்பதை நாம் ஊகிக்கலாம். ஆசிரியரின் அச்சுறுத்தல்கள் மற்றும் தண்டனைகளாலும் இவை தோன்றலாம். இவ்வாறான நிலைமைகளில் மாணவர்கள் தமது சுயகணிப்பைக் காப்பாற்றுவதற்காக பாடசாலைக்கு வராமல் விடுவதனை ஒரு வழிமுறையாகக் கையாளுகின்றனர். ஆசிரியர் செயலின் காரணமாக ஒரு பிள்ளை பாடசாலைக்கு வரவில்லையென வெளிப்படையாகக் கூறுவானானால் ஆசிரியர் தனது கல்வியில் அவர் கற்றுக்கொண்ட உளவியல் மற்றும் ஆலோசனை கூறலால் எவ்வித பயன்களும் கிட்டவில்லை என்றே கூற வேண்டும்.

ஆசிரியர்களின் வகைசொல்லலில் (accountability) தொடர்ந்து வீழ்ச்சிப் போக்கை அவதானிக்கலாம். வகுப்பறைக் கற்பித்தல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், மாணவரின் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகளைக் கவனித்தல், பரீட்சைப் பெறுபேறுகள் போன்ற சில முக்கியமான விடயங்களில் ஆசிரியர்கள் வகை சொல்ல வேண்டியவராகின்றனர். பாடசாலைகளிலே பல நன்மையான விடயங்களும் இடம்பெறுகின்றன. நன்மைதரும் விடயங்களாக இருந்தால் அவற்றின் பங்குதாரர் ஆவதற்கு எல்லோரும் தீவிரமாக இருப்பது போல பாதகமான விடயங்களின் போது தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றனர். உதாரணமாக

பொதுப்பரீட்சையொன்றில் மாணவர் பெறுபேறுகள் சிறந்ததாக இருந்தால், அதற்குத்தாமே பொறுப்பென உரிமை கொண்டாடுவோர், அவை பாதகமாக இருந்தால் தூரவிலகிவிடுகின்றனர். அதிபர்கள் தமக்கு ஒப்படைக்கும் வேலைகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்குள்ள கடப்பாட்டினை மறந்து விடுகின்றனர். மாணவர், பெற்றோர் மற்றும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு செயற்பாடுகள் அமைந்துள்ளனவா என்பதைப் பொறுப்புடன் எண்ணிப் பார்ப்போர் தொகை அருகிச் செல்கிறது.

அநேகமான ஆசிரியர்கள் தமது மாணவர் பற்றி மேலோட்டமான சான்றுகளின் அடிப்படையில் மனப்பதிவுகளையும் அனுமானங்களையும் உருவாக்குவர். இவற்றினால் ஏற்படும் முடிவுகள் தவறாக அமைந்து விடுகின்றன.

பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் வழங்கும் கல்வியியல்சார் பட்டங்களும் பயிற்சிகளும் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களின் தகைமைகளை அதிகரிக்கவும், பதவியுயர்வுகளுக்கும், சம்பள உயர்ச்சிக்கும் பயன்படுகின்றனவே தவிர மாணவர் மேம்பாடு குறித்துப் பயன்படுத்தப்படுவது மிகவும் குறைவு. ஆசிரியர் தொகை அதிகரிப்பினால், பதவிநிலை தொடர்பாக எழும் போட்டிகள் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதில் போட்டி மனப்பான்மையை உருவாக்கியுள்ளன.

**மாணவர்கள் பற்றி ஆசிரியர்கள் மேற்கொள்கின்ற முடிவுகள் வகுப்பறைக் கற்றல் — கற்பித்தல் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. நீண்டகாலச் சேவையும் அனுபவமும் கொண்ட ஆசிரியர்கள் கூட மாணவர்களைப் பார்த்த மாத்திரத்தில், அவர்களுடைய புறத்தோற்றத்தினைக் கொண்டு அவர்களை வகைப்படுத்தி வருகின்றனர். நீண்ட கால அவதானமும் அடிப்படைத் தகவல்களும் இன்றி மாணவர்களை வகைப்படுத்துவது, தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லும். இந்த மாணவன் படிக்க மாட்டான், இவனுடைய பெற்றோர் படிப்பறிவற்றவர்கள், கல்வி பற்றிப் பெற்றோருக்கு ஒன்றும் தெரியாது. இவன் வாழும் சூழல் சரியில்லை என்ற காரணங்கள் பலவற்றைக் கூறி மாணவர்களின் கல்வி சார் முயற்சிகளுக்குத் தடைபோடும் ஆசிரியர்களைப் பாடசாலைகளில் சாதாரணமாகக் காணலாம்.**

ஆசிரியர்கள் தாம் பெற்றுக் கொண்ட கல்வி, பயிற்சி மற்றும் அனுபவங்களைப் பிரயோகிப்பதற்குத் தடையாகவுள்ள பல காரணங்களைத் தெரிவித்து வருகின்றனர். பாடசாலை முகாமைத்துவச் சீர்கேடுகள், வகுப்பறைகளிலுள்ள வசதியீனங்கள், வளங்களின்மை, வேலைப்பழு, உரிய காலத்தில் பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் வழங்கப்படாமை அவற்றுள் முக்கியமானவை. இவை ஆசிரியரின் ஊக்கலைப் பாதிக்கின்றன என்பதால் இவ் விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டியதும் முக்கியமானது. ஆயினும், ஆசிரியர் தொழிலை ஓர் இறுதிப் புகலிடமாக கருதி அத் தொழிலுக்கு வந்து சேர்ந்த பின்னர், அதில் தொழிண்மைக்குரிய சாதகமான மனப் பாங்குகளை வளர்த்துக் கொண்டு தாம் பெற்றுக் கொண்ட கல்வியையும் பயிற்சியையும் மாணவர் மேம்பாட்டிற்காக வினைத்திறனுடன் பயன்படுத்தும் விருப்பினையும் ஆர்வத்தினையும் விருத்தி செய்ய வேண்டும்.

**References**


* David Fontana (1995) psycholosy for teachers Mc millan, London.

* Envisioning Educaton for human development proposales for general education in Sri Lanka. (2003) National Education Commission, Nawala.

* School Coures 1997, 2001 ministory of Education and Highers Education Isurupaya.


இன்றைக்கு அஞ்சல்வழிக் கல்வியில் கிடைக்கிற வருமானத்தைக் கொண்டுதான் பல்கலைக்கழகங்கள் செயல்பட முடிகிறது. அண்ணாமலை பல்கலைக்கழகம், சென்னை, மதுரை போன்ற பல்கலைக்கழகங்கள் எல்லாம் நிறைய அஞ்சல்வழிப் பாடங்கள் நடத்தி அதிலுள்ள வருமானத்தை வைத்துத்தான் அவை செயல்படுகிறது. இம்மாதிரியாகக் கல்லூரிகள் நடப்பதற்குக் காரணம் அரசாங்கம் பல்கலைக்கழகங்களுக்குப் போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. அஞ்சல் வழிக்கல்வி மூலம் கிடைக்கிற வருமானத்தில் தான் பல்கலைக்கழகங்களில் கல்வியை அளிக்க முடிகிறது. இதில் தரத்தை எவ்வாறு உருவாக்குவது.

"தமிழகத்தில் கல்வி" — வே. வசந்தி தேவியுடன் உரையாடல்

# முன்பள்ளிக் கல்வியும் ஆசிரியரும்

# சமூகவியல் இரட்டைத்தன்மை நோக்கி...

வி. தற்பரன்
இணைப்பாளர்,
பட்டப்பின்கல்விநெறி,
திறந்த பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாண பிராந்திய நிலையம்.

## அறிமுகம்

ஒழுங்கமைந்த கல்வியின் முதல்நிலை அம்சமாக முன்பள்ளிக் கல்வி அமைகிறது. இது பாலர் கல்வி, குழந்தைகள் கல்வி, ஆரம்பக் கல்வி என்ற பல்வேறு பெயர்களில் பலநாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிப் பிள்ளைகளை வீட்டிலிருந்து சமூகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான முதல் முயற்சியில் ஈடுபடும் நிறுவனங்களாகும்.

பிள்ளையின் சூழல் கவனம் ஈடுபாடு என்பவற்றை விசாலிப்பதற்கான ஒரு முயற்சி இதுவாகும். இது பிள்ளைகளிடம் சமூகம் நோக்கிய கவனக்குறைப்பை உருவாக்கும் தொடக்க முயற்சியாகும். முன்பள்ளிக் கல்வி குழந்தைகளை சமூகமயப்படுத்துகின்ற முன்முயற்சிகளில் ஒன்றாகவும் அதே சமயம் குழந்தைகளின் உரிமை, பாதுகாப்பு, நலமேம்பாடு, ஆளுமை விருத்திப் பண்புகள் என்பவற்றை முன்னேற்றக்கூடிய முதல்நிலையாகவும் இனங்காணப்பட்டுள்ளது. இத்தகைய முன்பள்ளிக் கல்வியில் வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்க செயற்பாடுகள் பல்வேறு கூறுகளில் தங்கியுள்ளன.

குறிப்பாக இத்தகைய கல்விக்கான அரச அங்கீகாரமும், வள ஒதுக்கீடுகள், கட்டமைப்பு ஏற்பாடுகள், பெற்றோரின் வசதி, பெற்றோரிடமும் சமூகத்திடமும் காணப்படும் குழந்தைக் கல்வி பற்றிய விழிப்புணர்வு, ஆசிரியர்களின் ஆளுமை, தொழில் ஈடுபாடு போன்ற பல காரணிகள் இதில் பங்குவகிக்கின்றன. ஆயினும் இவற்றுள் ஆசிரியச் செயற்பாடுகளே முன்கல்வி செயற்பாட்டின் மையவிசைச் சக்கரமாக விளங்குகின்றது. இந்த அடிப்படையில் இக்கட்டுரை முன்பள்ளிக் கல்வியிலான ஆசிரியரின் உரிய பங்கு பற்றியும், அவற்றால் உருவாக்கப்படும் சமூகவியல் இரட்டைத்தன்மை பற்றியும் கூர்மையாக கவனம் செலுத்துகின்றது.

முன்பள்ளிகள் குழந்தைகளின் குடும்பம், சமூகம் என்பன வழங்க முடியாத சில வசதிகளையும் வாய்ப்புக்களையும் வழங்குவனவாக முன்பள்ளிகள் அமைகின்றன. பொதுவாக போசாக்கு, சுத்தமான நீர், சீரான சுகாதாரம், ஆரம்ப சுகாதாரம் என்பவற்றுடன் வாழ்க்கையை தொடங்குவதற்கு முன்பள்ளிகள் அவசியமாகின்றன. புத்தி மற்றும் உளவியல் பாங்கான தூண்டுதல்களை ஆரம்பிப்பதற்கும் இவை உதவுகின்றன. வேறுவகையில் குறிப்பிடுவதனால் சர்வதேச ரீதியில் வற்புறுத்தப்படுகின்ற சிறுவர்கள், அவர்களது உரிமைகள் தொடர்பான தார்மீக கடப்பாடுகளையும், சட்டரீதியான கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதில் முன்பள்ளிகள் சிறப்பான பங்கினை வகிக்க வேண்டியுள்ளது.

## முன்பள்ளியும் சிறார்களும்

சர்வதேசரீதியாக 1989ல் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் பிள்ளைகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பான வாழ்வு பற்றி கவனம் செலுத்தி வருகிறது. இவ்வாறே பிள்ளைகள் தொடர்பான உலக உச்சி மகாநாடும் இதே வகையான அம்சங்களில் கூடிய கவனம் செலுத்தியது. பிள்ளைகள் தீங்குறு பிரிவினராக மாறாதிருப்பதற்கான அம்சங்களில் கூடிய கவன ஈர்ப்பை இவை ஏற்படுத்தின. 1979ல் பெண்கள் மீதான சகலவகையான பாகுபாடுகளையும் நீக்குவது தொடர்பான சமவாயம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பு பெண்களின் வாழ்க்கையில் பெரியதோர் முன்னேற்றம் ஏற்படாத போதிலும் சிறுவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கூடியளவு முன்னேற்றங்களை உருவாக்கியிருப்பதாக கோபி அன்னன் (அன்னன் 2001:04) தெரிவித்திருக்கும் கருத்து உற்று நோக்கத்தக்கது. அடுத்துவரும் தசாப்தத்திலும் பிள்ளைகளின் உரிமை, பாதுகாப்பு, நலன் தொடர்பாக சர்வதேச ரீதியாக கவனம் செலுத்தப்படும் என ஐ.நா ஸ்தாபனம் திடசங்கற்பம் கொண்டுள்-

ளது. பிள்ளைகள் ஒவ்வொருவரும் எவ்வித விதிவிலக்குமின்றி இயன்றளவு சிறந்த முறையில் தமது வாழ்க்கையை அமைக்க வேண்டும் என மேலும் அவர் வற்புறுத்தினர். இந்த இடத்தில் தான் முன்பள்ளி தன் பங்கினைத் தொடங்க வேண்டியுள்ளது. பிள்ளைகள் சிறந்த வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான இவ் ஆரம்பக் கல்வி நிறுவனமே முன்பள்ளிக் கல்வியாகும்.

பிள்ளைகளில் தாக்கம்மிக்க மாற்றங்களை உருவாக்கவும், நம்பிக்கை மிகுந்த எதிர்காலத்தை நோக்கி முன்னேறுபவர்களாக அவர்களை மாற்றக்கூடிய வல்லமை கல்விக்கு உண்டு. குழந்தைகளையும் அவர்களது குடும்பங்களையும் வறுமையிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் மீட்பதற்கு கல்வி பக்க பலமாக செயற்படும் என்றும் அதில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானதென்றும் மாசெல் அம்மையார் (மாசெல் - 2001:07) கூறியுள்ளார். இந்த அடிப்பமையிலும் முன்பள்ளி முக்கியமானதாக உள்ளது.

குழந்தை கருவில் உள்ளபோதும் பிறந்த சில மாதங்கள், சில வருடங்களின் போது நிகழும் சம்பவங்கள் அவர்களது ஆயுட்காலம் முழுவதும் நிலைபெறக்கூடியன. இந்த அடிப்படையில் நோக்கும்போது பிள்ளைகளில் பெற்றோரும், குழந்தைப் பராமரிப்பாளர்களும், பாடசலை ஆசிரியர்களும் அவர்களது உணர்வார்ந்த விவேகத்தை உருவாக்கக்கூடியவர்கள். குழந்தைப்பருவத்தில் அவர்களது உணர்வுகளை உள்வாங்கி அதனடிப்படையில் அவற்றை ஒழுங்குபடுத்துவதில் முன்பள்ளியும் அதன் ஆசிரியர்களும் முக்கியமானவர்கள்.

திடசித்தம், விழிப்புணர்வு, கருத்துப் படிவம், தன்னடக்கம், ஒட்டுணர்வு தொடர்பாடலிற்கும் ஒத்துழைப்பிற்குமான விருப்பம் போன்வற்றை நிர்ணயிப்பதிலும், ஒழுங்குபடுத்துவதிலும் முன்பள்ளியும் அதன் ஆசிரியர்களும் முக்கியமானவர்கள்.

முன்பள்ளிகள் குழந்தைகளின் குடும்பம், சமூகம் என்பன வழங்க முடியாத சில வசதிகளையும் வாய்ப்புக்களையும் வழங்குவனவாக முன்பள்ளிகள் அமைகின்றன. பொதுவாக போசாக்கு, சுத்தமான நீர், சீரான சுகாதாரம், ஆரம்ப சுகாதாரம் என்பவற்றுடன் வாழ்க்கையை தொடங்குவதற்கு முன்பள்ளிகள் அவசியமாகின்றன. புத்தி மற்றும் உளவியல் பாங்கான தூண்டுதல்களை ஆரம்பிப்பதற்கும்

**சர்வதேசரீதியாக 1989ல் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் பிள்ளைகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பான வாழ்வு பற்றி கவனம் செலுத்தி வருகிறது. இவ்வாறே பிள்ளைகள் தொடர்பான உலக உச்சி மகாநாடும் இதே வகையான அம்சங்களில் கூடிய கவனம் செலுத்தியது. பிள்ளைகள் தீங்குறு பிரிவினராக மாறாதிருப்பதற்கான அம்சங்களில் கூடிய கவன ஈர்ப்பை இவை ஏற்படுத்தின. 1979ல் பெண்கள் மீதான சகலவகையான பாகுபாடுகளையும் நீக்குவது தொடர்பான சமவாயம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பு பெண்களின் வாழ்க்கையில் பெரியதோர் முன்னேற்றம் ஏற்படாத போதிலும் சிறுவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கூடியளவு முன்னேற்றங்களை உருவாக்கியிருப்பதாக கோபி அன்னன் (அன்னன் 2001:04) தெரிவித்திருக்கும் கருத்து உற்று நோக்கத்தக்கது.**

இவை உதவுகின்றன. வேறுவகையில் குறிப்பிடுவதனால் சர்வதேச ரீதியில் வற்புறுத்தப்படுகின்ற சிறுவர்கள், அவர்களது உரிமைகள் தொடர்பான தார்மீக கடப்பாடுகளையும், சட்டரீதியான கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதில் முன்பள்ளிகள் சிறப்பான பங்கினை வகிக்க வேண்டியுள்ளது.

பொதுவாக மூன்று வயது என்பது பாலர் பாடசாலையில் சேர்வதற்கான வயதாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அது பாலர் பருவத்தை தீர்மானிக்கவல்லது. சில வளர்ச்சியடைந்த நாடுகளில் பரம்பரை தாக்கம், ஊட்டம் என்பவற்றினடிப்படையில் இரண்டு வயது மட்டத்திலும் பாலர் பள்ளியில் அனுமதிக்கப்படுவதையும் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

சர்வதேசரீதியாக பாலர் பாடசாலை பருவத்தினர் பின்வருவனவற்றை பெற்றுக் கொள்வதற்கு இடமளிப்பதாக பாலர் பாடசாலை செயற்பட வேண்டியுள்ளது. இதனை இப்பாடசாலை ஆசிரியர்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

* நுட்பமான தசை இயக்கத்தினை மேம்படுத்துவதற்கு வாய்ப்பளித்தல்.
* உரையாடுதல், வாசித்துக் காட்டுதல், பாடுதல், ஆகியவற்றின் மூலமான மொழி அறிவை ஊக்குவித்தல்.
* ஆளுமை உணர்வை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
* ஒத்துழைத்தல், ஒத்தாசை செய்தல், பகிர்ந்து அனுபவித்தல் ஆகியவற்றை கற்கும் வாய்ப்புக்களை வழங்குதல்.
* எழுத்து, வாசிப்பு ஆகிய முயற்சிகளில் பரிசீலனைகளை மேற்கொள்ளுதல்.
* செயல்மூலம் கற்பதற்கான நேரடி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
* பொறுப்பேற்றல், முடிவுசெய்தல் ஆகியவற்றிற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.
* சுய கட்டுப்பாடு, ஒத்துழைப்பு, விடாமுயற்சி ஆகிய பண்புகளை வளர்ப்பதற்கு ஊக்கமளித்தல்.
* பிள்ளைகள் தம்மைப்பற்றிய சுயமதிப்பை உருவாக்குவதற்கு ஆதரவளித்தல்
* சுயகருத்துக்களை வெளிப்படுத்த வாய்ப்பளித்தல்

* ஆக்கத்திறனை ஊக்குவித்தல். இவை சார்ந்த பல்வேறு அம்சங்களிலும் முன்பள்ளி கூர்மையாக கவனம் செலுத்த வேண்டும்.

முன்பள்ளி பாடசாலைகள் எத்தகைய நோக்கங்களை கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றி தெளிவான கருத்துக்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றை பின்வருமாறு குறிப்பிடுகின்றனர் (ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு - 2002:ப.245)

* புலன்கள் வாயிலாக அனுபவங்களை பெற்றுக் கொள்ளக்கூடிய மனோரம்மியமான பாதுகாப்புடன் கூடிய சூழலை வழங்குதல்.
* அன்றாட செயற்பாடுகளுக்குள் நற்பண்பு நல்லொழுக்க நடத்தைக் கோலத்தை விருத்தியடைவதற்கும் விருப்பத்திற்குரிய கதை கூறப் பழகுவதற்கும் சந்தர்ப்பம் அளித்தல்.
* விரும்பத்தக்க சுகாதார பழக்க வழக்கங்களை பழக்கப்படுத்திக்கொள்வதற்கு வழிகாட்டல்.
* நற்குணங்களை வளர்ப்பதற்கு ஏற்ற மனம் கொண்ட சூழலை வழங்குதல்.
* உடல் வளர்ச்சிக்கும் ஒழுங்கான திறன் மேம்பாட்டிற்கும் சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்தல்.
* அறிவுசார் ஆற்றலை ஆக்கபூர்வமாக விருத்தி செய்தல்.
* தினசரி கடமைகளை ஒழுங்காக செய்யும் திறனை விருத்தி செய்தல்.
* சூழலை விரும்புதல், அதனை மதித்தல், அதனை இரசித்தல், சூழலைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கு வழிகாட்டல்.
* சவால் விடும் சந்தர்ப்பங்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றலை பெருக்குதல்.
* பிள்ளைக்கு ஆரம்ப பிள்ளைப் பராயத்தினை விருப்புடனும், மிக்க மகிழ்ச்சியுடனும் கழிப்பதற்கான வசதியை அளித்தல்.

## முன்பள்ளி ஆசிரியர்கள்

முன்பள்ளிகளின் தொழிற்பாடு பல்வேறு மாறிகளில் தங்கியுள்ள போதிலும் முன்பள்ளி ஆசிரியரின் பங்கே மிக முக்கியமானதாக கொள்ளப்படுகின்றது. இவ் ஆசிரியர்களின் இயல்பு, ஆளுமை, கல்வித்தரம், அனுபவம், தொழிற்பாடு, பொறுப்புணர்வை ஏற்றல், தொழில் செய்வதால் மகிழ்வுறுதல், வகைகூறுதல் போன்ற பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. எனினும் முன்பள்ளி ஆசிரியர்கள் தாய்மை உணர்வுடன் அன்பையும், அரவணைப்பையும் வழங்க வேண்டும் என்பது அதிகளவிற்கு வற்புறுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி பெண் ஆசிரியர்கள் முன்பள்ளிகளிற்கு மிகவும் பொருத்தமானவர்கள் என்ற கருத்து மேலோங்கியிருப்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. ஆயினும் ஆண் ஆசிரியர்கள் இதில் தொழிற்பட முடியாது என்ற கருத்து எங்கும் வலியுறுத்தப்படவும் இல்லை. இதில் பெண் ஆசிரியர்கள் சமூகரீதியிலும் குடும்ப ரீதியிலும் சிறு குழந்தைகள் நோக்கிய கவரும் வலிமையைப் பெற்றுள்ளனர். பிள்ளைகள் பற்றிய அணுகுமுறை, அவதானம், உளநிலை உணர்வுகள், வாழ்வின் அனுபவங்கள் போன்ற பலவும் அவர்களை முன்பள்ளிக்கு பொருத்தமானவர்களாக மாற்றியிருப்பது போல் தென்படுகிறது. இலங்கையில் தொழிற்படுகின்ற சில முன்பள்ளிகளில் ஆண் ஆசிரியர்கள் பணியாற்றுவது கவனிக்கப்பட்டுள்ளது. எனினும் இலங்கையிலும், குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதியில் பெரும்பாலானவர்கள் பெண் ஆசிரியர்களாக இருப்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கற்பித்தலியல் பெண்களிற்கான துறை என்று வலுவாக நம்பப்படும் போது அது பாலர் பாடசாலைக்கு மிகவும் பொருத்தமானதான இயல்பாகவே அமைந்து விடுகின்றது.

## ஆசிரியர்களின் சமூகவியல்

முன்பள்ளி ஆசிரியர்கள் எவ்வாறு முன்பள்ளியில் பணியாற்றுவர் என்பது அவர்கள் எத்தகைய சமூக பின்னணியிலிருந்து வந்துள்ளனர் என்பதும் முக்கியமானது. அதாவது அவர்கள் மீது எவ்வாறான சமூகவியல் கண்ணோட்டங்கள், நம்பிக்கைகள், பழக்கங்கள், ஒழுங்குகள், செயற்பாடுகள், பதியப்பெற்றுள்ளன என்பது முக்கியமானது. அதற்கேற்பவே முன்பள்ளிகளில் அவர்கள் குழந்தைகளை அணுகுவர். அவர்களில் அன்பு செலுத்துபவர் அவர்களை பதியப்படுத்துவர். அவர்களை சமூகமயப்படுத்தும் இந்த முறையில் நோக்கும் போது இலங்கையில் இரு வகையான பின்னணியினர் பணியாற்றுகின்றனர்.

**முன்பள்ளி ஆசிரியர்கள் எவ்வாறு முன்பள்ளியில் பணியாற்றுவர் என்பது அவர்கள் எத்தகைய சமூக பின்னணியிலிருந்து வந்துள்ளனர் என்பதும் முக்கியமானது. அதாவது அவர்கள் மீது எவ்வாறான சமூகவியல் கண்ணோட்டங்கள், நம்பிக்கைகள், பழக்கங்கள், ஒழுங்குகள், செயற்பாடுகள், பதியப்பெற்றுள்ளன என்பது முக்கியமானது. அதற்கேற்பவே முன்பள்ளிகளில் அவர்கள் குழந்தைகளை அணுகுவர். அவர்களில் அன்பு செலுத்துவர் அவர்களை பதியப்படுத்துவர்.**

1. மேட்டுக் குடியினர் சார்ந்த ஆசிரியர்கள்
2. சாதாரண வறிய சமூக பின்னணி சார்ந்த ஆசிரியர்கள்.

இதில் முதல் வகுப்பினர் பெரிதும் இலங்கையின் தலைநகரங்களிலும், பெரிய நகரங்களிலும் உள்ள முன்பள்ளிகளில் கற்பிப்போராக செயற்படுவர். இவர்கள் தமக்குரிய பயிற்சியையும், கல்வியையும் வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் அல்லது சிறப்பார்ந்த

பல்கலைக்கழகங்களில் பெற்றிருப்பார்கள். அதற்கான நிதி வளம் கொண்ட குடும்பங்களை ஒத்தவராக இருப்பர். மேற்கூறிய கலாசாரத்தையும், ஆங்கில மொழிகள் வாழ்வு முறையையும் கொண்டனவாக இருப்பர். இவர்களது தொழிலின் தொடர்புகள் பிள்ளைகளினூடாக சமூகத்தின் மேல் அடுக்கினர் சார்ந்ததாக இருக்கும் இவர்கள் கற்பிக்கும் முன்பள்ளிகள் தொடர்பாக பின்வரும் அம்சங்கள் குறிப்பிடத்தக்கன.

1. மிகப்பெரிய வியாபார நிறுவனங்கள் அல்லது மிகப்பெரிய முதலீட்டாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளிகளாக இருத்தல்.
2. இவை நகர்ப்புறங்களில் அல்லது துணை நகரங்களில் தொழிற்படுதல்.
3. உயர் வருமான, உயர் அதிகாரம் மிக்க பணித்துறைத் தொழில்களில் உள்ள சமூகவல்லமை கொண்ட குடும்பங்களின் பிள்ளைகளிற்கு கற்பிப்பதாக இருத்தல்.
4. ஆங்கில மொழி மூலத்தைக் கொண்டிருத்தல். தாய்மொழியை அரச நிபந்தனைகளை திருப்தி செய்வதற்காக மட்டும் கற்பித்தல்.
5. மேலைத்தேய கலாசாரம் சார்ந்ததாக இருத்தல். அதாவது மேலைத்தேயவருடன் இலகுவில் இசையக்கூடிய நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், நடைமுறைகளை அறியச் செய்தல், குறிப்பாக தம்மைப் பற்றிய மேலான சுயமதிப்பு உடையவர்களாக வளர்த்தல்.
6. உயர் அதிகார பதவிகள், நிறுவனங்கள் என்பனவற்றில் தொழில் பெறுவதற்கான அடிப்படை உடல், உள திறன்களை விருத்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்துதல்.
7. குடும்பம் சார்ந்த விழுமியங்களை விட தனிமனித விழுமியங்களை முன்னேற்றுவதில் அதிக கவனம் செலுத்தும்
8. சமூகத்தின் உயர் அடுக்கு நிலையிலுள்ள நிறுவனங்களின் பண்பாடுகள் பற்றி அறிதற்கு வாய்ப்பளிக்கப்படும்.
9. மிக நவீன கற்றல் உபகரணங்களும் கற்பித்தல் நுட்பங்களும் கையாளப்படும்.
10. மிகையான சுதந்திரத்தை பிள்ளைகளிற்கு வழங்குவதாகவும் அத்தகைய உட்கட்டமைப்பு வசதிகள் கொண்டதாகவும் இருக்கும்.
11. பெருமளவிற்கு சர்வதேச பாடசாலைகளிலும், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும் கல்வியை தொடர்வதற்கான அடிப்படையை வழங்குவதில் கூடிய கவனம் செலுத்தப்படும்.

**வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகள் இரண்டு தசாப்தகால யுத்த பாதிப்புக்களினால் வலுவாக பின் தங்கியுள்ளன. இவை "தனித்துவமான தீங்குறு பண்புகளை" கொண்டுள்ளன. இத்தகைய முன்பள்ளிகளின் நிலைமை ஆசிரியர்களின் பங்கு என்பன பற்றி உளவியலாளர்களும், மருத்துவ வியலாளர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அண்மைக் காலத்தில் கூடிய கவனம் செலுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.**

இத்தகைய உயர் குழந்தைகளுக்கான முன்பள்ளிகளாக பல இயங்கி வருகின்றன. கொழும்பு மாநகரிலும், கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை போன்ற பெருநகரங்களிலும் இத்தகைய நிறுவனங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. கற்பிக்கும் ஆசிரியர்கள் வெளிநாட்டவர்களாகவும், ஆங்கில மொழி பேசும் குடும்பங்களிலிருந்தும் வந்தவர்களாக இருப்பதும் கவனிக்கத்தக்கது. இத்தகைய முன்பள்ளிகள் சமூகத்தவரின் உயர் வகுப்பினரை மிகக் கவனமாக தயாரிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர் என்பதை விளங்கிக் கொள்ளுதல் அவசியம் உலகமயமாதல் இதற்கு ஊக்கமளிக்கின்றது.

இண்டாரவது வகையினரான முன்பள்ளி ஆசிரியர்களே இலங்கையின் சமூக, பொருளாதார தேவைகளிற்கு ஏற்றதாக பிள்ளைகளை சமூகமயப்படுத்தும் பணியில் ஈடுபடுபவர்களாவர். அதிகளவு நிறுவனங்கள் தாழ் வருமான மையங்களிலும், நகர எல்லைகளிலும் இரு மருங்கிலும் செயற்படும் முன்பள்ளியில் இவர்கள் கற்பிக்கின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் செயற்படும் முன்பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்த அடுக்கினுள் மேலும் ஓர் வகையில் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பதும் கவனிக்கத்தக்கது. இத்தகைய ஆசிரியர்கள் கற்பிக்கும் முன்பள்ளிகள் தொடர்பாக பின்வரும் அம்சங்கள் குறிப்பிடத்தக்கன.

1. இவை அரசாங்கம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், மாதர் மன்றங்கள், சனசமூக நிலையங்கள், தனிப்பட்ட முதலாளிகளால் நிர்வகிக்கப்படுவனவாக இருத்தல்.
2. இவை கிராமங்களிலும், நகரில் வறிய மையங்களிலும் தொழிற்படுதல்.
3. நடுத்தர, வருமானத்தின் தாழ் நிலையிலுள்ள பெற்றோரின் பிள்ளைகளும், தாழ் வருமானத்தின் உயர்நிலையிலுள்ள பெற்றோரின் பிள்ளைகளும் கல்வி கற்கும் நிலையங்களாக இருத்தல்.
4. முன்பள்ளியில் கல்வி பற்றிய தெளிவான விளக்கம், விழிப்புணர்வு அற்ற பெற்றோரின் பிள்ளைகளாக அதிகமானவர்கள் இருத்தல்.
5. கற்பிக்கும் மொழி மூலம் தாய்மொழி மூலமாக இருக்கும். ஆங்கில மொழி துணைநிலை மொழியாக மாத்திரம் எந்தவித நிபுணத்துவமும் இன்றிக் கற்பிக்கப்படும்.
6. சராசரி இலங்கையராக வாழ்வதற்குத் தேவையான விழுமியங்கள் மாத்திரம் போதிக்கப்படும். சில சமயங்களில் தாழ்வுணர்ச்சி அகற்றப்படாத நிலையில் கூட இக்கல்வி ஏற்பாடுகள் அமைந்து விடுகின்றன. "சமூகத்திலிருந்து உடைந்து வெளிக்கிளம்புதல்" தொடர்பான

எந்தவித உணர்வையும் இவை உருவாக்குவதில்லை.

7. சாதாரண அரச தொழில்கள் அல்லது தனியார் துறை சார்ந்த சம்பளத்திற்கான வேலைகள் என்பவற்றிக்குத் தேவையான நம்பிக்கைகளையும் உளவலிமையையும் மாத்திரம் இவை வழங்குகின்றன.

8. தனிநபர் ஆளுமை விருத்தியை விட குடும்பத்திலும் சமூகத்திலும் உறுப்பினராக இருப்பதற்கே இப்பள்ளி நடைமுறைகள் முக்கியத்துவம் வழங்குகின்றன.

9. சமூகத்தினர் மாத்திரம் அல்லாது தாழ்நிலை நிறுவனங்கள், நடைமுறைகள் என்பவற்றிக்குரியவர்களாகவே அவர்களை மாற்றுவதற்கு இவை அடித்தளம் இடுகின்றன.

10. மிகப்பழைய கற்பித்தல் உபகரணங்களும் நுட்பங்களும் கையாளப்படும் பலசமயங்களில் பொருத்தக்கேடான கற்பித்தல் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

11. இந்நிறுவனங்களின் ஆசிரியர்கள் எவ்விதப் பயிற்சியும் அற்றவர்களாக இருப்பர். அல்லது முயன்று தவறி திருந்தி கற்பிக்கும் அனுபவங்களைப் பெற்றவர்களாக இருப்பர்.

12. இவ் ஆசிரியர்கள் மிகக் குறைந்த வருமானங்களை பெறுபவராகவும் நிச்சயமற்ற வருமானங்களை பெறுவோராகவும் காணப்படுகின்றனர். "வறிய தொழில் வாய்ப்பு" என்ற தகுதிக்குள்ளேயே இவர்கள் அடங்குகின்றனர்.

13. இங்கு இப்பிள்ளைகளிற்கான சுதந்திரம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன போதியளவினதாக இல்லை. "புதிய மாதிரிக் கட்டுப்பாடுகளை" விதந்துரைக்கின்றன.

14. சாதாரண, சுதேசிய அரச பாடசாலைகளிலும், அரசமானியத்தில் தங்கியிருக்கும் பல்கலைக்கழகங்களிலும் கற்பதற்கான அடித்தள ஆற்றல் உளவலிமை என்பவற்றையே இவற்றால் வழங்க முடிகிறது.

இவ்வாறு பலவீனமான பாடசாலைகளாக இவை தொழிற்படுகின்றன. இதனால் இவ் ஆசிரியர்களும், முன்னைய ஆசிரியர்களுடன் ஒப்பிடும் போது நலிவுறு பிரிவினராகவே செயற்படுகின்றனர். இவர்களிற்கான கல்வி மற்றும் பயிற்சி ஏற்பாடுகள் நிதிவளம் அற்றனவாகவும், ஊக்குவிப்பு குறைந்தவையாகவும் காணப்படுகின்றன.

நவீன நுட்பங்கள் காலம் தாழ்த்தியே இவர்களிற்கு கற்பிக்கப்படுகின்றன. இவர்களது செயற்பாடுகளை வழிகாட்டவும், கண்காணிக்கவும் ஒழுங்கான நெறிமுறைகள் இல்லை. அங்கொன்றும், இங்கொன்றுமான செயற்பாடுகளே காணப்படுகின்றன. இவற்றின் வளர்ச்சிக்காக அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் நலம்புரி நிறுவனங்கள் உதவியை எதிர்பார்த்து நிற்கவேண்டியனவாக இவை உள்ளன. இதனால் உறுதியான செயற்றிட்டங்கள் ஏதுமின்றி இவை தப்பிப்பிழைத்து செயற்படுகின்றன.

வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகள் இரண்டு தசாப்தகால யுத்த பாதிப்புக்களினால் வலுவாகப் பின்தங்கியுள்ளன. இவை "தனித்துவமான தீங்குறு பண்புக்களை"க் கொண்டுள்ளன. இத்தகைய முன்பள்ளிகளின் நிலைமை ஆசிரியர்களின் பங்கு என்பன பற்றி உளவியலாளர்களும், மருத்துவலியலாளர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அண்மைக்காலத்தில் கூடிய கவனம் செலுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு முன்பள்ளிகளில் சமூகவியல் சார்ந்த இரட்டைத்தன்மை காணப்படுவதும் உலக மயமாதலில் அவை வலுப்பெறுவதும் கவனிக்கத்தக்க முனைப்பான அம்சமாகும்.

## முடிவுரை

முன்பள்ளி கல்வி சர்வதேசரீதியாக முக்கியமானது. இக்கருத்துக்கு மாற்றுக் கருத்துக்கள் இல்லை. இலங்கையில் கல்விமுறையில் அரசாங்கம் தனது பங்கினை ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்விவரை ஏற்றுக் கொண்டு அரை நூற்றாண்டாக நிறைவேற்றியும் வருகின்றது. 1997 வரை கொண்டு வரப்பட்ட எல்லாக் கல்விச் சீர்திருத்தங்களிலும் கொள்கை அளவில் இலங்கை அரசாங்கம் முன்பள்ளிக் கல்வியின் அவசியத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. சோசலிச நாடுகள் முன்பள்ளிக் கல்வியை வெகுவாக வலியுறுத்துகின்றது. ஆனாலும் அரசாங்கம் அப்பொறுப்பினை ஏற்கவோ நிறுவனங்களை ஒதுக்கவோ இவற்றிற்கான ஆசிரிய வளம், ஆசிரிய பயிற்சியினைப் பற்றியோ கவனம் செலுத்தவோ தயாராக இருக்கவில்லை. இது இலங்கைப் பாடசாலைக் கல்வி முறையின் தோல்விக்கு அடிப்படையான காரணங்களில் ஒன்றாக இருத்தல் கூடும் என்று கருதுவதில் தவறில்லை. எனினும் 2000ம் ஆண்டிலிருந்து முன்பள்ளியிலான அரச கவனம் அதிகரித்திருப்பது திருப்தியளிக்கத்தக்கதாகும். வடக்கு கிழக்கு மாகாண சபை சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் கல்வியில் கவனம் செலுத்தி அதற்கான தனிப் பகுதி ஒன்றை உருவாக்கி பல்வேறு வெளியீடுகளை வெளியிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

**கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் யுத்தத்தினாலும், செல்வந்த நாடுகளின் ஆளணி ஈர்ப்பு முயற்சிகளினாலும் வளர்ச்சியடைந்த நாடுகளிற்கு சென்ற இலங்கையரின் பிள்ளைகள் நவீன மேலைத்தேய முன்பள்ளிகளில் கல்வி கற்றுக் கொண்டிருப்பதையும் மனம் கொள்வது அவசியம். இவர்கள் எதிர்கால கல்வியையும் வாழ்வையும் எங்கு தொடரப் போகின்றார்கள் என்பதும் அதற்கு அவர்களது முன்பள்ளி ஏற்பாடுகள் எந்த வகையில் அமையும் என்பதும் எம்முன் எழுந்துள்ள மற்றொரு வேதனை தரும் வினாவாகும்.**

இலங்கையர் தம்பிள்ளைகளை மேலே விபரித்தவாறு செயற்படும் இரட்டை நிலையான முன்பள்ளிகளில் கற்பித்து வருகின்றனர் என்பது ஓர் நடைமுறை உண்மை. இதனால் சமூகவியல் ரீதியாக இரட்டை மாதிரி சமூகம் ஒன்றை வடிவமைக்க இவ்வாறான கல்வி நடைமுறை அடிப்படையாக அமைந்து விடுமோ என்ற சந்தேகம் கல்வியியலாளரிடம் முனைப்படைந்துள்ளது.

இவற்றிற்குப் புறம்பாக கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் யுத்தத்தினாலும், செல்வந்த நாடுகளின் ஆளணி ஈர்ப்பு முயற்சிகளினாலும் வளர்ச்சியடைந்த நாடுகளிற்கு சென்ற இலங்கையரின் பிள்ளைகள் நவீன மேலைத்தேய முன்பள்ளிகளில் கல்வி கற்றுக் கொண்டிருப்பதையும் மனம் கொள்வது அவசியம். இவர்கள் எதிர்காலக் கல்வியையும் வாழ்வையும் எங்கு தொடரப் போகின்றார்கள் என்பதும் அதற்கு அவர்களது முன்பள்ளி ஏற்பாடுகள் எந்த வகையில் அமையும் என்பதும் எம்முன் எழுந்துள்ள மற்றொரு வேதனை தரும் வினாவாகும்.

இவ்வாறு முன்பள்ளிகளும், ஆசிரியர்களும் அவை சார்ந்த வளர்ச்சியும் மாறுபட்ட சமூகவியல் படிமங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன என்பது இங்கு வற்புறுத்தப்படுகின்றது.

இவை பற்றிய கண்ணோட்டமும் ஆய்வு அணுகுமுறையும் வளர்ச்சியடைய வேண்டும். இதில் பல்கலைக்கழகங்களும், கல்வி அமைச்சும், கல்வி ஆய்வு நிறுவனங்களும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

### அடிக்குறிப்பும் உசாத்துணையும்


01. அன்னன் - ஏ.கோபி (2001) முன்னுரை, உலகச்சிறுவர் நிலை 2001 - யுனிசெவ் அறிக்கை USA ப.04

02. மாசல் கிராசா (2001) உலகப்பிள்ளைகளுக்கு வாக்குறுதி, உலகச்சிறுவர் நிலை 2001, - யுனிசெவ் அறிக்கை USA ப.07

03. ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு (2002) பின்னணித் தகவல் 03 முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுனர் கைநூல் - யுனிசெவ் திருகோணமலை ப.245.

04. காண்க - சிவயோகன்: சா.மகேந்திரன் கோ.சோமசுந்தரம். த. (2002) சிறுவர் உளநலம் -ஆரம்ப பாடசாலை மாணவர்களிற்கு உதவும் ஆசிரியர் கைநூல் ஜீ.ரீ.இசட் பீ கெயர் வெளியீடு

05. காண்க - முன்பள்ளி ஆசிரியர் பயிற்றுனர் கைநூல் (2002)


❑

---

## ஆசிரியரிடமிருந்து...

1ம் பக்கத் தொடர்ச்சி...

ஆசிரியர்கள் சமூக மட்டங்களில் ஏற்படும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

தேசிய ரீதியில் ஏற்படும் பேரழிவுகள் இடிபாடுகளில் இருந்து மக்களைப் பாதுகாத்து அடுத்த கட்ட வாழ்வியல் நெறிமுறைகளுக்கு உரியவர்களாக தயார்ப்படுத்தும் பெரும் பணியையும் ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இதற்காக தேசிய ரீதியில் அழிவு முகாமைத்துவ (Disaster Management) செயற்பாடுகளில் பங்கு கொள்ளக் கூடியவர்களாக ஆசிரியர்கள் மாறுவதும் மாற்றப்படுவதும் முக்கியம்.

இன்று ஆசிரியர்களின் கடமை பாடசாலை மட்டத்தில் மட்டும் மாணவர்களின் அறிதிறன் மட்டத்தை உயர்த்துவது மட்டமன்று. சமூகத்தின் கட்டமைப்புச் சிராக்கத்தின், புனர்வாழ்வு - புனர்நிர்மாணப் பணிகளில் பங்குகொள்ளக்கூடியவர்களாகவும் ஆசிரியர்கள் மாற வேண்டும் அதற்கான அறிதிறன்கள், சமூகத்திறன்கள் யாவற்றையும் விருத்தி செய்வது கூட ஆசிரியர்களின் பணியாக புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் "ஆசிரியர் சமூகம்" ஒரு பெரும் நிறுவனமாக உள்ளார்கள். இதனாலேயே இவர்களால் சமூகத்தில் பெரிய மாற்றங்களை உருவாக்க முடியும். இன்று நாம் உடனடியாக சுனாமி அலைகளால் ஏற்பட்ட பேரழிவுகளில் இருந்து அடுத்த கட்டம் நோக்கி நகர வேண்டும்.

இவை குறித்த விரிவான சிந்தனைகள் உரையாடல்கள் நோக்கி நாம் பொறுப்புடன் ஈடுபடுவதுடன், செயற்பாடுகள் நோக்கி முன்னேற வேண்டும் இந்தப் பிரக்ஞை ஆசிரியர்களுக்கு வேண்டுமென்ற அறை கூவலை "அகவிழி" மிகுந்த பொறுப்புடன் சுட்டுகிறது. இது காலத்தின் கட்டாயமும் கூட..

❑

# தீவகவலயக் கல்வியும் ஆசிரியர் பிரச்சினையும்

ஒரு பிரதேசத்தின் கல்வி மேம்பாடு என்பது அப்பிரதேசத்தில் கிடைக்கப்பெறும் ஆசிரியர் வளம், பௌதிகவளம் பொருளாதார வளங்களை அடிப்படையாகக்கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட கல்வி நிறுவனம் முழுமையான செயற்பாட்டில் ஈடுபடவும், தரரீதியானதும், செயல் ரீதியானதுமான செயற்பாடு மேம்பட்டு அமைய மேற்கூறப்பட்ட வளங்கள் இன்றியமையாததாகின்றது. எமது நாட்டைப் பொறுத்தமட்டில் ஓர் சம நிலைத்தன்மை பேணப்படாத வகையிலேயே இடம் பெற்று வருவதை காணமுடிகிறது. இதன் விளைவால் நாட்டின் குறிப்பிட்ட பிரதேசங்கள் கல்வித் தரநிலையில் பாதிப்படைந்து கல்வி மேம்பாட்டில் மீளும் தகைமை குறைவடைந்து வருவதை காணலாம்.

> **தீவகக் கல்விவலயத்தைப் பொருத்த மட்டில் ஆரம்பக் கல்வியில் கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கை மிக அதிகமாகவும், இடைநிலைக் கல்வி மாணவர்கள் அடுத்த நிலையில் இருப்பதையும், உயர்தரத்தில் குறைந்தளவிலான மாணவர்களை கொண்டதாக அமைவதை காண முடிகிறது. உயர்தரத்தில் மிகக் குறைவான நிலைக்கு வந்தமைக்கு க.பொ.த சாதாரண பரீட்சையில் ஏற்படும் சித்தியின்மை அதிகரிப்பும், அப்படி சித்தியடைந்தால் நகரப் பாடசாலைக்கு செல்கின்ற நிலைப்பாடும் காரணமாக அமைந்துவிடுகிறது.**

தேசியரீதியில் கல்விநடைமுறையில் ஒதுக்கப்பட்ட பிரதேசமாகவும், கல்வியில் கஷ்டபிரதேசங்களில் ஒன்றாக இடம்பெறுவது தீவகக் கல்வி வலயமாகும். இவ்வலயம் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு கட்டுப்பட்டதாகவும், யாழ் மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் ஒன்றாக, எட்டுதீவுக் கூட்டங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய கல்வி கோட்டங்களை தன்னளவில் உள்ளடக்கியதாகவும், 1995 முன் 76 பாடசாலைகளையும், தற்போது 51 பாடசாலைகளை கொண்டதாகவும், ஒரு ஆசிரிய வள நிலையத்தை கொண்டதாகவும் அமைகிறது. யாழ் குடாநாட்டுடன் தரைவழித் தொடர்பை கொண்டதாகவும் ஏனைய தீவுக் கூட்டங்களுடன் கடல் வழிப்பாதையைக் கொண்ட மிகவும் பின் தங்கிய சமூக பொருளாதார பின்னணியிலான சமூகக் கட்டமைப்பினைக் கொண்டதாகவே தீவகக் கல்வி நிலையம் காணப்படுகின்றது. இப் பிரதேச மக்கள் மீன்பிடி, விவசாயம், கூலி மற்றும் சுயதொழிலில் கூடியளவில் ஈடுபடும் தன்மையுடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

பரா. இராஜேஸ்வரன்
ஆசிரியர்,
தீவகக் கல்வி வலயம்

## களநிலைமை

தீவகக் கல்விவலயத்தைப் பொறுத்தமட்டில் பல்வேறு அடிப்படை வசதிகளில் பின் தங்கிய நிலையில் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. கல்வி நிலையைப் பொறுத்தமட்டில் இங்கு பல்வேறு அடிப்படை வசதியீனங்கள் காணப்படுகின்றன. பௌதிகவளம், ஆளணி வளம் என்பவற்றைப் பொறுத்தமட்டில் ஒப்பீட்டு ரீதியில் ஏனைய பிரதேசங்களைவிட மிகக் குறைவாகவே உள்ளது. பாடசாலை செயற்பாட்டுக்கும், கல்வி நிர்வாகச் செயற்பாட்டுக்கும் வள ஆளணியினரின் பற்றாக்குறை உயர்வாக இருப்பதால் கல்வித்தர நிலையை மேம்படுத்துவதில் பாரிய இடர்பாடுகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.

தீவக வலயத்தில் பாடசாலை மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரிய வளமோ, பௌதிக வளமோ பொருத்தப்பாட்டுடன் அமைகின்றதா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. அண்மையில் ஏற்பட்ட இடம் பெயர்வுக்கு முன்னர் தீவக வலயத்தில் 76 பாடசாலைகள் இயங்கி வந்தன. பின்னர் தற்போது 51 பாடசாலைகளே இயங்கி வருகின்றன. அட்டவணை 01 தீவகவலய பாடசாலை விபரத்தை தர அடிப்படையிலும், ஆண்டடிப்படையிலும் ஒப்பிட்டுக் காட்டுகின்றமையை

அவதானிக்க முடிகிறது.

| தீவக வலயத்தில் இயங்குகின்ற பாடசாலைகள் | | |
|---|---|---|
| தரம் | 1995 | 2004 |
| 1 AB | 03 | 04 |
| 1C | 07 | 06 |
| 11 | 21 | 22 |
| 111 | 45 | 19 |
| மொத்தம் | 76 | 51 |

(மூலம் - மாகாண கல்வி அமைச்சு அறிக்கை - 2004)

1995 ஆண்டு காலப்பகுதியில் இருந்து 2004 ஆண்டில் இயங்குகின்ற பாடசாலைகள் எண்ணிக்கை வீழ்ச்சி அடைவதற்கு நாட்டில் ஏற்பட்ட யுத்தமும், அதனால் இடம்பெற்ற இடப்பெயர்வும், வெளிநாடு நோக்கிய புலப்பெயர்வும் மிக முக்கிய காரணமாக அமைகின்றது. மாணவர் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் தற்பொழுது முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது மிகக் குறைவாகவே உள்ளனர் எனலாம். இதற்கு நகரத்தை நோக்கிய மக்களின் நாட்டமும் ஓர் காரணமாக அமைகின்றது. அட்டவணை (02) மாணவர்களின் எண்ணிக்கையை காட்டுவதாக அமைகின்றது.

**தீவக கல்வி வலயத்தை பொறுத்தமட்டில் பல்வேறு அடிப்படை வசதிகளில் பின் தங்கிய நிலையில் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. கல்வி நிலையைப் பொறுத்தமட்டில் பல்வேறு அடிப்படையில் வசதியீனங்கள் காணப்படுகின்றன. பௌதிகவளம், ஆளணிவளம் என்பவற்றை பொறுத்தமட்டில் ஒப்பீட்டு ரீதியில் ஏனைய பிரதேசங்களைவிட மிகக் குறைவாகவே உள்ளதை அவதானிக்க முடிகிறது. பாடசாலை செயற்பாட்டுக்கும், கல்வி நிர்வாகச் செயற்பாட்டுக்கும் வள ஆளணியினரின் பற்றாக்குறை உயர்வாக இருப்பதால் கல்வித்தர நிலையை மேம்படுத்துவதில் பாரிய இடர்பாடுகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.**

| அட்டவணை 02<br>மாணவர் எண்ணிக்கை | |
|---|---|
| வகுப்பு | மாணவர் எண்ணிக்கை |
| ஆரம்பப் கல்வி | 4265 |
| கனிஷ்ட இடைநிலை | 2582 |
| சிரேஷ்ட இடைநிலை | 2208 |
| உயர்தரம் | 0331 |
| மொத்தம் | 9386 |

(மூலம் - வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அறிக்கை - 2004)

தீவகக் கல்வி வலயத்தைப் பொருத்தமட்டில் ஆரம்பக் கல்வியில் கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கை மிக அதிகமாகவும், இடைநிலைக் கல்வி மாணவர்கள் அடுத்த நிலையில் இருப்பதையும், உயர்தரத்தில் குறைந்தளவிளான மாணவர்களைக் கொண்டதாக அமைவதை காணமுடிகிறது. உயர்தரத்தில் மிகக் குறைவான நிலைக்கு வந்தமைக்கு க.பொ.த சாதாரண பரீட்சையில் ஏற்படும் சித்தியின்மை அதிகரிப்பும், அப்படி சித்தியடைந்தால் நகரப் பாடசாலைக்கு செல்லுகின்ற நிலைப்பாடும் இதற்கு காரணமாக அமைந்துவிடுகிறது. மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியவளம் அமையப் பெற்றுள்ளதா என்பது சந்தேகமாகவே உள்ளது.

அட்டவணை 03 ஆசிரியர் எண்ணிக்கை, பற்றாக்குறையை விளக்குவதாக அமைகிறது.

தீவகக் கல்வி வலயத்தை பொறுத்தமட்டில் ஆரம்பக் கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் மிகவும் அதிகமான ஆசிரிய வளப்பிரச்சினை காணப்படல் முக்கியமாகிறது. இதனால் கல்வியின் அடிப்படைத் தன்மை பாதிப்படைவது தவிர்க்க முடியாததாகிறது. இதன் தொடர்ச்சியாக சாதாரண, உயர்தரப் பரீட்சையில் கல்வித் தரத்தை பாதிப்படையச் செய்வதைக் காணலாம். ஆசிரியர் பற்றாக்குறை மாணவர்களின் கற்றலை நேரடியாகப் பாதிப்படைய செய்வதாக உள்ளது.

| அட்டவணை 03<br>ஆசிரியர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| பாடம் | கிடைக்கிறது | தேவை | பற்றாக்குறை |
| | A | R | CD/E |
| 1-5 (பொது) | 131 | 148 | 17 |
| 3-5 (ஆங்கிலம்) | 003 | 047 | 44 |
| 6-11 (விஞ்ஞானம், கணிதம்) | 074 | 066 | 08 |
| 6-11 (ஆங்கிலம்) | 006 | 035 | 29 |
| 6-11 (வேறு) | 151 | 098 | 53 |
| 12-13 (விஞ்ஞானம்) | 015 | 099 | 06 |
| 12-13 (கலை/வர்த்தகம்) | 045 | 062 | 17 |

(மூலம் - வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அறிக்கை - 2004)

இதற்கான ஆரோக்கியமான பரிகார நடவடிக்கையை முன்னெடுத்தல் அவசியமாகிறது. ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையாக இருப்பது, தீவக வலய ஆங்கில மொழி மட்டம் மிகத் தாழ்மட்டத்திலேயே இருக்கக் காரணமாக அமைகின்றது.அத்துடன் கணிதபாடம், விஞ்ஞான பாடத்திலும் மிக மோசமான வீழ்ச்சிநிலையே உள்ளது. இதனை அட்டவணை 04 காட்டுகிறது.

| அட்டவணை 04 | | | | | |
|---|---|---|---|---|---|
| சாதாரண மதிப்பீட்டு தரவு | | | | | |
| பாடம் | தோற்றி யோர் | சித்திய டைந்தோர் | வலயம் சித்திவீதம் | மாகாணம் சித்திவீதம் | தேசியம் சித்திவீதம் |
| தமிழ் | 466 | 329 | 70.6 | 78.85 | 76.69 |
| கணிதம் | 569 | 199 | 35.0 | 39.11 | 40.03 |
| விஞ்ஞானம் | 257 | 187 | 35.5 | 47.01 | 54.19 |
| சமூகக்கல்வி | 546 | 329 | 60.3 | 69.3 | 69.61 |
| ஆங்கிலம் | 547 | 015 | 02.7 | 20.09 | 27.44 |

(மூலம் — க.பொ.த சாதாரண மதிப்பீட்டு அறிக்கை 2004)

தற்பொழுது அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவியுடன் வலயமட்ட பாடசாலைகள் பலவற்றுக்கு பௌதிக வள அபிவிருத்தி வழங்கப்பட்டு வருவதையும், புதிதாக ஆசிரிய நியமணங்களை கல்விக்கல்லூரிகள் நிவர்த்தி செய்வதையும் காணலாம்.

## ஆசிரியர் பிரச்சினைகள்

கல்வியில் கஷ்டப்பிரதேசமாக உள்ள இடங்களில் தீவகக் கல்வி வலயமும் ஒன்றாகும். தற்பொழுது கணிசமான ஆசிரிய வள நியமனமும் கஷ்டப் பிரதேச அடிப்படையிலேயே இடம் பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு பணியாற்றச் செல்லும் ஆசிரியர்கள் பெரும்பாலும் புதிதாக நியமனம் பெறுபவர்களாகவோ அல்லது கஷ்ட பிரதேச சேவை அடிப்படையிலான நியமனமாகவோ அமையலாம். இவ்வாறான நடைமுறையின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் பல்வேறு மட்டங்களில் பல்வேறு நிலையில் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

### போக்குவரத்து

தீவக வலயத்தைப் பொறுத்தமட்டில் போக்குவரத்து தரை வழியிலும், கடல் மார்க்கத்திலும் இடம் பெறுகின்றது. ஒப்பீட்டுரீதியில் கடல் போக்குவரத்து செய்கின்ற போது பல்வேறு இடர்பாடுகளை சந்திப்பது வழமையான செயற்பாடாகவே மாறி உள்ளது. ஆசிரியர்கள் காலதாமதமாக பாடசாலைக்கோ அல்லது வீட்டுக்கோ செல்லுகின்ற நிலை காணப்படுகிறது. தேவையற்ற பணச் செலவையும், உடற்களைப்பு, சோர்வு, என்பனவற்றை போக்குவரத்துக் கட்டமைப்பு ஏற்படுத்துவதாக உள்ளது. போக்குவரத்து செய்யும் பாதை மிக மோசமான நிலையில் இருப்பதால் பல்வேறு விபத்துக்கள் நடைபெறவும் பல்வேறு சிரமங்களிற்கு உட்படவும் காரணமாக அமைகிறது.

**ஆசிரியர்களுடன் கல்வி நிர்வாக அதிகாரிகள் சுமுகமான உறவைப் பேணி மானிட உறவை கட்டியெழுப்பி கல்வி முகாமைத்துவம் சிறப்பாக இயங்க வழி செய்யும் புதிய அணுகு முறையை கையாளுதல் மிக அவசியம். ஆசிரியர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை உருவாக்காமல் இயல்பான முறையைக் கையாண்டு ஆசிரியர் தேவையை நிவர்த்தி செய்வது மிக அவசியம்.**

### பாடசாலை உட்கட்டமைப்பு

பாடசாலை உட்கட்டமைப்பு வளங்களைப் பொறுத்தமட்டில் உணவு, சுத்தமான குடிநீர், தங்குமிட அறை, கழிவறை வசதிகள் திருப்தியற்ற நிலையிலேயே காணப்படுகிறது. எழுவதீவு நெடுந்தீவுப் பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்களை பொறுத்தமட்டில் இப்பிரச்சினைகளிற்கு அதிகமாக முகம் கொடுத்து வருகின்றனர். கழிவறையை பொறுத்தமட்டில் அதனை உரிய முறையில் பராமரிக்கின்ற தன்மை மிக மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கு ஊழியர் இன்மையும் காரணமாக உள்ளது. இத்தகைய பிரச்சினைகள் பெண் ஆசிரியர்களையும், ஆண் ஆசிரியர்களையும் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உட்படுத்தப்படுவது தவிர்க்க முடியாததாகிறது. இதனால் கல்விச் செயற்பாடு முழுமையாக இயக்கம் பெறுவதில் பின்னடைவுகளைச் சந்திக்கின்றது.

### மாணவர் வரவும் இடைவிலகலும்

ஆசிரியர் சிறப்பான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட மாணவர் வரவு மிக முக்கியமாகின்றது. தீவக வலயத்தைப் பொறுத்தமட்டில் பொருளாதாரக் காரணங்கள், மற்றும் கல்வி மீது நாட்டமின்மை போன்ற காரணங்களால் மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்ற தன்மை குறைவாக உள்ளதுடன், இடைவிலகலுக்கு உட்படுகின்ற தன்மையையும் காணமுடிகிறது. இதனால் ஆசிரியர் வகுப்பறையில் கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்பதில் பல இடர்பாடுகளை சந்திக்கின்றனர். இதற்கான பரிகார நடவடிக்கையை முன்னெடுப்பது அவர்களுக்கு பெரும் சவாலாக உள்ளது. இச்சவாலுக்கு முக்கிய காரணமாக பெற்றோர் மத்தியில் கல்வி தொடர்பான விழிப்புணர்வு இன்மை மிக முக்கிய காரணமாகவும் உள்ளது.

### சமூக மதிப்பு

தீவகக் கல்விவலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களை பொறுத்தமட்டில் ஏனைய பிரதேசத்தில் கடமையாற்றுபவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது குறைவான நிலையிலேயே வைத்து நோக்கப்படுகின்ற இயல்பு காணப்படுகின்றது. குறிப்பிட்ட ஆசிரியர் தான் தீவக வலயப் பாடசாலையில் கடமையாற்றுவதாக கூறினால் மற்றவர்கள் தீவகத்திலா? வேலை

செய்கிறீர்! என ஒரு நகைப்புக்கிடமான வகையில் கேள்வி தொடுக்கும் தன்மையை இங்கு கடமை புரியும் ஆசிரியர்கள் எதிர்நோக்குகின்றனர். இப்பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்கள் குறைவான அறிவுடையவர்கள் என்ற பொதுவான கருத்துநிலை சமூக மட்டத்தில் நிலவுகின்றதையும் காண முடிகின்றது. இந்நிலை ஆசிரியர் மனதில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

> **தீவக வலயத்தை பொறுத்தமட்டில் போக்குவரத்து தரை வழியிலும், கடல் மார்க்கத்திலும் இடம் பெறுகின்றது. ஒப்பிட்டுரீதியில் கடல் போக்குவரத்து செய்கின்ற போது பல்வேறு இடர்பாடுகளை சந்திப்பது வழமையான செயற்பாடாகவே மாறி உள்ளது. ஆசிரியர்கள் காலதாமதமாக பாடசாலைக்கோ அல்லது வீட்டுக்கோ செல்லுகின்ற நிலை காணப்படுகிறது. தேவையற்ற பணச் செலவையும், உடற்களைப்பு, சோர்வு, என்பனவற்றை போக்குவரத்துக் கட்டமைப்பு ஏற்படுத்துவதாக உள்ளது.**

### ஆசிரியர் முன்னேற்றம்

பொதுவாக இப்பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு உயர் கல்வி வாய்ப்பை பெறுவதில் பல்வேறு தடைகளை எதிர்நோக்க வேண்டி உள்ளது. இதற்கு போக்குவரத்து - தூரம் ஒரு காரணமாகவும், தங்கி நின்று ஆசிரியர்கள் கற்பிப்பதனால் யாழ் நகரத்துடனான தொடர்பு மட்டுப்படுத்தப்படுகின்றமையும் உயர் கல்வி வாய்ப்பை பெறுவதிலும், தொடர்வதிலும் பல தடைகளை எதிர்கொள்கின்றமையை காணலாம். இதனால் தங்களுடைய தொழிலில் முன்னேற்றம் அடைவது இயலாத காரியம் என்ற நிலைக்கு இவர்கள் தள்ளப்படுகின்ற சூழ்நிலையை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் கஷ்டப் பிரதேசமாக தீவக கல்வி வலயம் இருந்தாலும் உயர் கல்வி வாய்ப்பை பெறுவதில் இவர்களுக்கு எத்தகைய விசேட புள்ளிதிட்டங்களோ சேவை மதிப்போ உயர் கல்விநிறுவனங்கள் வழங்காமை இப்பகுதி ஆசிரியர்களைப் புறக்கணிக்கும் செயலாகவே அமைகின்றது என இவர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

### ஊக்கல்

மிகவும் பின் தங்கிய பிரதேசமான இக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் பயனுடைய விடயமாகும். இவ்வலயத்தைப் பொருத்தமட்டில் சில பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேச விசேடச் கொடுப்பனவு இது வரை வழங்கப்படாமை; மற்றும் புள்ளி வழங்கும் திட்டமுறை ஒழுங்கு முறையாக கையாளப்படாத தன்மையும்; ஆசிரியர் சேவையை உறுதி செய்யும் செயன் முறையை உரிய காலப்பகுதியில் நிறைவேற்றுக் கொள்வதில் பல்வேறு இடர்பாடுகளை கல்வி நிர்வாக செயற்பாட்டு முறைகள் எதிர் கொள்கின்ற முக்கியமான பிரச்சினைகளாகவும் உள்ளன. இத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றுகின்ற போது ஆசிரியர்கள் சோர்வடையாமல் தமது கடமையில் ஈடுபடவாய்புண்டாகும்.

### செயலமர்வுகள்

ஆசிரியர்களின் வாண்மைத்துவ மேம்பாட்டுக்கு செயலமர்வுகள் நடாத்தப்படுதல் வரவேற்கப்பட வேண்டிய விடயம் ஆகும். இருந்தாலும் தொடர்ச்சியாக ஐந்து நாட்களும் தங்கி வேலை செய்கின்றவர்களுக்கு சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் செயலமர்வு நடத்தப்படுவது மிகவும் சிரமத்துக்கு உள்ளாக்குகிறது. தீவக வலயத்தைப் பொறுத்தமட்டில் மற்றைய வலயங்கள் மாதிரி உடனுக்குடன் வீடு சென்று வரும் ஆசிரியர்கள் மிகக் குறைவு. அவர்கள் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களுக்கு மட்டும் தான் வீடுகளுக்கு செல்வார்கள். இதனால் இத்தகைய செயலமர்வுகள் அவர்களை பொறுத்தமட்டில் மனரீதியிலும், குடும்ப உறவைப் பேணுவதிலும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது.

### ஆசிரியர் அலுவலர் தொடர்பு

ஆசிரியர்களுடன் கல்வி நிர்வாக அதிகாரிகள் சுமுகமான உறவைப் பேணி மானிட உறவை கட்டியெழுப்பி கல்வி முகாமைத்துவம் சிறப்பாக இயங்க வழி செய்யும் புதிய அணுகு முறையை கையாளுதல் மிக அவசியம். ஆசிரியர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை உருவாக்காமல் இயல்பான முறையைக் கையாண்டு ஆசிரியர் தேவையை நிவர்த்தி செய்வது மிக அவசியம். ஆசிரியர்கள் கடன் வசதிகளைப் பெறுவதில் பல இடர்பாடுகளை சந்திக்கின்றனர். மற்றும் நலன்புரிச் செயற்பாட்டை உரிய முறையில் கையாளுதல் அவசியம். உரிய சேவைக்காலம் முடிவடைந்த பின்னர் இடமாற்றம் பெறுவதில் பல்வேறு பாகுபாடுகள் காட்டப்படுவதை காணலாம். இத்தகைய தன்மை ஆசிரியர் மனதை விரக்தி நிலைக்கு இட்டுச் செல்லும் செயற்பாடாகவே உள்ளது. உரையாடலை மேற்கொள்வது ஆசிரியர்கள் மனதை ஆற்றுப்படுத்தும். கல்வி அலுவலர்கள் தமது கடமையை உரிய நேரத்தில் செய்வது ஆசிரியர்களுக்கு திருப்தி கொடுப்பதாக அமையும். அத்துடன் கல்வி அதிகாரிகள் ஆசிரியர்கள் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணுதல் முதற் கடமையாகும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பது உடனடித் தேவையாக உள்ளது. அப்பொழுதுதான் ஆசிரியர்களின் திருப்தியான சேவையை நாம் எதிர் பார்க்க முடியும்.

### கல்விப் பணிப்பாளர்கள்

தீவக வலயத்தைப் பொறுத்தமட்டில் ஆசிரியர்கள், மாணவர்கள் பிரச்சினையின் அடிப்படையை இனங்கண்டு அதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல் அவசியமாகிறது. மாணவர்களைப் பொறுத்தமட்டில் மொழி தொடர்பான தரநிலையில் பொதுவாகவே மிகப் பின் தங்கிய நிலையில் உள்ளனர். இதற்குரிய பரிகார செயற்றிட்டத்தை ஒருங்கிணைந்த செயற்பாட்டில் இடம் பெறச் செய்தல் கல்விப் பணிப்பாளர்களின் மிக முக்கிய பணியாக உள்ளது.

இதை விடுத்து கல்வியின் உயர்நிலைப் பெறுபேற்றை மட்டுமே எதிர்பார்ப்பது பொருத்தமற்ற செயலாகவே உள்ளது. பாடத்திட்டத்தை பூர்த்திசெய்வது எந்தளவுக்கு மாணவர்களுக்கு பொருத்தமானதாக அமையும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் புள்ளி பெறவேண்டும் என ஆசிரியர்களை நெருக்குவதும் எந்த விதமானபலனையும் தரப்போவதில்லை.

### பெண் ஆசிரியர்கள்

பெண் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் இவ்வலயத்தைப் பொறுத்தமட்டில் பல இடர்பாடுகளை முகம் கொடுக்கின்றனர். இவற்றில் முக்கியமானது பாதுகாப்புக் கெடுபிடிகள். திருமணமான பெண் ஆசிரியர்கள் கர்ப்பக்காலப் பகுதியில் நீண்டதூர பயணத்தில் ஈடுபடுவதால் உடலியல் ரீதியிலும் உளரீதியிலும் பல்வேறு பாதிப்புக்கு உட்படுகின்றனர். இத்தகைய ஆசிரியர்களிற்கு உடனடியாக தற்காலிக இடமாற்றம் வழங்குவது ஆரோக்கியமான செயற்பாடாக அமையும்.

### பொருத்தமற்ற நியமனமும் இடமாற்றமும்

ஆசிரியர் நியமனம் இடம் பெறும் போது பாடசாலையின் தரம், தேவையான ஆசிரியர் தரநிலை கவனிக்கப்படாமல் ஏதோ ஆசிரியர் நியமனம் இடம்பெற்றால் போதுமென்ற நிலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியர் தேவையாக உள்ள ஒரு பாடசாலைக்கு கிறிஸ்தவசமய ஆசிரியரை நியமிப்பது எந்தவகையில் பொருத்தமானதாக அமையும். இவ்வாறு நியமனம் பெற்றுவரும் ஆசிரியர்கள் பல்வேறு இடர்பாடுகளை முகம் கொடுப்பதை அவதானிக்க முடிகிறது. இத்தகைய முறைகளில் கவனம் செலுத்துவது தீவக கல்விவயைத்தை மேம்படுத்த உதவியாக அமையும்.

இப்பகுதிக்கு கடமையாற்ற நியமிக்கப்படும் ஆசிரியர்கள் பொதுவாக புதிய நியமனமாகவும் அல்லது கஷ்டபிரதேச அடிப்படையில் இடமாற்றப்படுபவர்களாகவும் உள்ளனர். இதனால் இவர்கள் மனரீதியில் சோர்வடைவது இயல்பானதாகும். இத்தகைய தன்மைக்கு உட்படுவதை தவிர்ப்பது கல்விநிர்வாக செயற்பாட்டுக்கு ஆரோக்கியமானதாக அமையும். இதற்கான அபிவிருத்தித்திட்டங்களை இருக்கின்ற நிலையில் வைத்துக்கொண்டோ அல்லது புதிதான மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட கல்வித்திட்ட முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

தீவக கல்வித்திட்ட மேம்பாட்டுக்குஅரச எதிர்பார்ப்புக்களை விடுத்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இப்பிரதேச மக்களுடன் தொடர்பு கொண்டு பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளையும், ஆசிரியர் வளங்களையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க முடியும். இதற்கு ஒருங்கிணைந்த கூட்டமைப்பு அவசியமானது.

உயர் தரத்தைப் பொறுத்தமட்டில் மாணவர் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் தூர அளவினை கருத்தில் கொண்டு சில இடங்களில் மட்டும் உயர்தர வகுப்பை இடம் பெறச் செய்வதனால் கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்தல் இலகுவாக அமைவதுடன் ஆசிரியர் பற்றாக்குறையும் ஓரளவு தவிர்க்க முடியும். இதற்கு உயர்தரம் இயங்கவுள்ள பாடசாலைகளிற்கு தங்குமிட வசதியை ஏற்படுத்தல் மிகமுக்கியமாகும்.

ஆசிரியர்களின்சேவைக்காலம் முடிந்த பின்னர் அவர்களிற்கு இடமாற்றம் வழங்குவதில் உரிய ஒழுங்கிணைந்த அமைப்பை உருவாக்கிச் செயற்படுத்துவது பொருத்தமானதாக அமையும். சேவைக்காலத்தை கருத்தில் கொண்டு இடமாற்றம் வழங்குகின்ற போது ஆசிரியர் மனதில் ஓர் நம்பிக்கை ஏற்பட்டு உற்சாகமாக சேவையில் ஈடுபட வாய்ப்புண்டாகும்.

## மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள்

தீவக வலயத்தில் நிலவும் பல்வேறு இடர்பாடுகளை நிவர்த்திசெய்வதன் மூலம் ஏனைய பிரதேச கல்வித்தரத்துடன் சமநிலைத்தன்மையை ஏற்படுத்திக்கொள்ள முடியும். நகரத்தில் இருந்து தீவகவலயம் அதிக தொலைவில் இல்லை. உரியமுறையில் போக்குவரத்தும், போக்குவரத்து வீதியும் அமையும் பொழுது தூரம் மிகப் பெரிய பிரச்சினையாக அமையப்போவதில்லை. இப்பகுதியில் வாழ்ந்த மக்களில் அநேகமானவர்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திலும், தலைநகரிலும் வாழ்கின்றனர். சிலர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் நிரந்தரக்குடிகளாகியுள்ளனர். தொழில் அடிப்படையிலும் மக்கள் உள்ளக இடப்பெயர்வுக்கு உட்பட்டுவாழ்வதை இன்று காணமுடிகின்றது.

**ஆசிரியர் சிறப்பான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட மாணவர் வரவு மிக முக்கியமாகின்றது. தீவக வலயத்தைப் பொறுத்தமட்டில் பொருளாதாரக் காரணங்கள், மற்றும் கல்வி மீது நாட்டமின்மை போன்ற காரணங்களால் மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்ற தன்மை குறைவாக உள்ளதுடன், இடைவிலகலுக்கு உட்படுகின்ற தன்மையையும் காணமுடிகிறது. இதனால் ஆசிரியர் வகுப்பறையில் கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்பதில் பல இடர்பாடுகளை சந்திக்கின்றனர்.**

ஆசிரியர்களின் போக்குவரத்துப் பிரச்சினையை தீர்க்க கல்வி அதிகாரிகளோ அல்லது ஆசிரியர் சங்கமோ போக்குவரத்து சபை அல்லது மினிபஸ் சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி பாடசாலை ஆரம்பமாகின்றபோதும் முடிவடைகின்றபோதும் குறிப்பிட்ட பிரதேசத்தில் இயங்குகின்ற பாடசாலை ஆசிரியர்களை ஏற்றி இறக்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தலாம். இதன் மூலம் எல்லா ஆசிரியர்களும் ஒரே நேரத்தில் வீடு செல்லவும் சந்தர்ப்பம் உண்டாகும். அத்துடன் பாதுகாப்பான முறையாகவும் அமையும்.

ஆசிரியர்களின் உயர் கல்வி வாய்ப்பை அதிகரிக்க இவ்வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களிற்கு சில முன்னுரிமைத் திட்டங்-

களை வழங்குமாறு உயர்கல்வி நிறுவன அதிகாரிகளிடம் ஒன்றிணைந்த அமைப்பின் ஊடாக அறியக் கொடுத்தல் ஆசிரியர்களது உயர்கல்வி வாய்ப்பில் முன்னேற்றகரமான சூழலை உருவாக்கும்.

நெடுந்தீவு, எழுவதீவு, அனைலைதீவு பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குஉரிய தங்குமிடவசதியை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை வாசிப்பு வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இதற்கு ஊர் பொது நிறுவனங்களினதோ அல்லது வெளிநாட்டு உதவியையோ நாடமுடியும். நயினாதீவைப் பொறுத்தமட்டில் நாகபூசணி அம்மன் கோயில் நிர்வாகம் இவ்விடயத்தில் கவனத்தில் கொண்டு பாடசாலைகளினது பௌதீக வளப் பிரச்சினை, மாணவர் பிரச்சினை, ஆசிரியர்கள் தங்குமிட வசதிகளை தீர்க்க வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

**ஆசிரியர்களின்சேவைக்காலம் முடிந்த பின்னர் அவர்களிற்கு இடமாற்றம் வளங்குவதில் உரிய ஒழுங்கிணைந்த அமைப்பை உருவாக்கி செயற்படுத்துவது பொருத்தமானதாக அமையும். சேவைக்காலத்தை கருத்தில் கொண்டு இடமாற்றம் வழங்குகின்ற போது ஆசிரியர் மனதில் ஓர் நம்பிக்கை ஏற்பட்டு உற்சாகமாக சேவையில் ஈடுபட வாய்ப்புண்டாகும்.**

ஆசிரியர் தொழிற்சங்கம், கல்வி அலுவலர்கள், கல்வி நிர்வாக அதிகாரிகள், பெற்றோர்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், சமுர்த்தித்திட்ட அலுவலர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து தற்காலிக அமைப்பை உருவாக்கி கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தும் செயற்திட்டங்களை உருவாக்கி மெதுவாகமுன்னெடுத்தல். இதனால் ஆசிரியர் மாணவர்பிரச்சினையைத் தீர்க்க பல்வேறு வழிகள் பிறக்கும்.

செயலமர்வுகளை முன்னெடுப்பது பயனுடையதாக இருந்தாலும் விடுமுறைகளில் அதாவது சனி, ஞாயிறு இரு தினங்களும் நடாத்தப்படுதல் தவிர்க்க முற்படுதல் வேண்டும் ஞாயிற்றுக்கிழமைகளிலாவது தவிப்பது ஆரோக்கியமானதாக அமையும்.

குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை கல்விப்பணிப்பாளர், கணக்காளர், கிராமசேவகர், பிரதம எழுதுவினைஞர், தொழில் சங்க பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பினர் ஆசிரியர்களை சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்தும் பொழுது ஆசிரியர் பிரச்சினை, கல்வி தொடர்பான பிரச்சினைகளை இனங்கண்டு மேம்படுத்துவதற்கான செயல் நிலைகளை முன்னெடுக்க உதவும்.

## முடிவுரை

தீவகத்தை பொறுத்தமட்டில் கல்வி நிலையிலும், விவசாய, பொருளாதார அடிப்படையிலும் முன்னர் உயர்வான நிலையே காணப்பட்டது. பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாகவும், ஏனைய காரணங்களாலும் தமது சொந்த இடங்களை விட்டு மக்கள் இடம் பெயர்ந்தனர். இதன் காரணமாக தீவகம் பல்வேறு கட்டமைப்புக்களில் சிதைவடையலாயின. இதன் பிரதிபலிப்பை இன்றைய கல்வி நிலையைக் கொண்டு அறிய முடிகிறது. வடகிழக்கை பொறுத்தமட்டில் மிகவும் பின் தங்கிய கல்வி வலயங்களில் ஒன்றாக தற்போது தீவகக் கல்வி வலயம்காணப்படுகிறது. தற்போது தீவக கல்வி வலயத்தில் காணப்படும் இடர்பாடுகளை நிவர்த்தி செய்வதினூடாக கல்வித்தர அபிவிருத்தியில் வினைத்திறனான வெளியீட்டை அடையமுடியும். இதற்கு கல்வியியலாளர்கள், அரசசெயலக அதிகாரிகள், கல்வி நிர்வாக உத்தியோகத்தர்கள், ப.நோ.கூ.சங்க பிரதிநிதிகள், சமுர்த்திதிட்ட உத்தியோகத்தர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய வகையில் வினைத்திறனும், நடைமுறைச்சாத்தியம் உள்ள செயற்றிட்டங்களை முன்னெடுப்பது அவசியமாகின்றது. ❑

## அஞ்சலி!

(கலாநிதி க.சொக்கலிங்கம்)



பாரம்பரியத் தமிழ் கல்வி முறைமையில் ஓர் புதிய ஊற்று சொக்கன் என்ற க.சொக்கலிங்கம். இவர் ஆசிரியராக அதிபராக விரிவுரையாளராக உயர்ந்து சென்றவர். இன்னொரு புறம் எழுத்தாளராக, ஆய்வாளராக மொழி பெயர்ப்பாளராகவும் இருந்து செயற்பட்டவர். தமிழ்ப்புலமைப் பாரம்பரியத்தில் சொக்கன் தனது நிறைவான பணிகள் மூலம் தனக்கான தகுதியை நிலை நாட்டியவர். அத்தகைய பெருமகனார் இழப்பு ஈடு செய்யக் கூடியது அல்ல.

தனது கற்றல் கற்பித்தல் அனுபவங்களையும் கல்வி பற்றிய தனது சிந்தனைகளையும் தேடல்களையும் எதிர்பார்ப்புகளையும் ஏமாற்றங்களையும் இயலாமைகளையும் அகவிழியுடன் பரிமாறிக் கொள்ள விரும்பினார். அந்த விருப்பம் கைகூடி வருவதற்குள் சொக்கனின் புலமை மரபுகளின் தடங்களை நினைவில் "அகவிழி" நிறுத்திக் கொள்கிறது.

# ஆசிரியர் கல்வித்துறை சீர்திருத்தப்பட வேண்டும்

பேரா. சோ. சந்திரசேகரன்
கல்வித்துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்

21ம் நூற்றாண்டில் உலகளாவிய ரீதியில் சகல நாடுகளிலும் கல்வி ஒரு புதிய முக்கியத்துவத்தை பெற்றிருக்கிறது. ஆயினும் இந்த முக்கியத்துவத்தின் அறிகுறிகள் - சர்யல்கள் 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் தான் உருவாயின என்று கூறமுடியாது. 20ம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியிலேயே இந்த அறிகுறிகள் தோன்றிவிட்டன.

கல்வி ஒரு மனித உரிமை, அடிப்படை உரிமை என்றும் ஆரம்பக் கல்வியை அல்லது 9ம் ஆண்டு பாடசாலைக் கல்வியைப் பெறுவது பிள்ளைகளின் அடிப்படை உரிமை என்றும் 5-14 வயதெல்லைக்கு உட்பட்ட அனைவரும் கட்டாய இலவசக் கல்வியைப் பெறுதல் வேண்டும் என்பதும் சென்ற நூற்றாண்டின் இறுதியில் வளர்முக நாடுகளின் அரசுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்ட சில கொள்கைகள் ஆகும்.

> கல்வி ஒரு மனித உரிமை, அடிப்படை உரிமை என்றும் ஆரம்பக் கல்வியை அல்லது 9ம் ஆண்டு பாடசாலைக் கல்வியைப் பெறுவது பிள்ளைகளின் அடிப்படை உரிமை என்றும் 5—14 வயதெல்லைக்கு உட்பட்ட அனைவரும் கட்டாய இலவசக் கல்வியைப் பெறுதல் வேண்டும் என்பதும் சென்ற நூற்றாண்டின் இறுதியில் வளர்முக நாடுகளின் அரசுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்ட சில கொள்கைகள் ஆகும்.

புதிய 21ம் நூற்றாண்டு பற்றியும் அந்நூற்றாண்டில் கல்வி பெறவுள்ள முக்கியத்துவம் பற்றியும் ஆராய்ந்த எதிர்காலவியலாளர்கள் எடுத்துக் கூறிய சில கருத்துக்கள் இவ்விடத்து முக்கியமானவை.

இதுகாலவரை காலமும் உலகநாடுகள் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டன. அபிவிருத்தி அடைந்த நாடுகள், வளர்முக நாடுகள் என்ற வகைப்பாடு இன்றும் நடைமுறையில் உள்ளது. 21ம் நூற்றாண்டை அறிவுமைய நூற்றாண்டு அல்லது தகவல் மைய நூற்றாண்டு என்று வர்ணிக்கும் எதிர்காலவியலாளர்கள் புதிய நூற்றாண்டில் ஒரு புதிய வகைப்பாடு தோன்றும் என்று கூறியுள்ளனர். உலகநாடுகள் கல்வி அறிவில் சிறந்த நாடுகள் என்றும் அறியாமையால் பீடிக்கப்பட்ட நாடுகள் என்றும் பகுக்கப்படும் நிலைமை பற்றி எடுத்துக் கூறியுள்ளனர். புதிய நூற்றாண்டில் உலக நாடுகளின் சமுகங்கள் அறிவார்ந்த சமூகங்கள் என்றும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் அறிவார்ந்த நிறுவனங்கள் என்றும் உடல் உழைப்பாளர்கள் மூளை உழைப்பாளர்கள (Brain Workers) என்ற பழைய பாகுபாடு அற்றுப்போய் அறிவுசார் ஊழியர்கள் என்ற ஒரு பாகுபாடு மேலைநாடுகளில் தோன்றியுள்ளது. வளர்முக நாடுகளில் இத்தகைய நிலைமையை நோக்கி செல்ல வேண்டிய ஒரு கட்டாயம் தற்போதைய உலகமயமாக்கலின் விளைவாக தோன்றியுள்ளது.

21ம் நூற்றாண்டில் கல்வி பெற்றுள்ள ஒரு பாரிய முக்கியத்துவத்தை இக்கருத்துக்கள் சுட்டிக்காட்டுகின்றன. சகலரும் கல்வி பெற வேண்டும் என்பதோடு அவர்கள் தரமான கல்வியைப் பெறவேண்டும், அத்தகைய கல்வியானது இளைஞர்களைப் புதிய நூற்றாண்டில் சிலாகித்து வாழச் செய்யும் இலக்குடன் அமைதல் வேண்டும் என்ற கருத்துக்கும் இன்று முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதாவது பாடசாலை வயதெல்லையில் உள்ள அனைத்துப் பிள்ளைகளும் பள்ளிகளில் இருந்து இடையில் விலகாது தொடர்ந்து கல்வி பெறுதல் வேண்டும் என்பதோடு அவர்கள் சில அடிப்படையான கல்வித் தேர்ச்சிகளை பெற்றிருத்தல் வேண்டும் என்றும் இன்று வலியுறுத்தப்படுகிறது. மேலும் அவர்கள் புதிய நூற்றாண்டில் 'வாழ்நாள் முழுவதும் கல்வி' பெறுவதற்கான திறன்களையும் உளப்பாங்குகளையும் பள்ளிக் கல்வியின் போது பெற்றுக் கொள்ளல் வேண்டும். வன்முறைகள் பெருவாரியாக அதிகரித்துள்ள இந்நாளில் அவர்களுக்கு

சிறந்த விழுமியக் கல்வி வழங்கப்பட வேண்டும்.

தமது உரிமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்த சிறந்த பிரஜைகளாக அவர்கள் மாற்றம் பெற பள்ளிக் கல்வி உதவ வேண்டும் என்பதும் புதிய நூற்றாண்டுக்கான கல்வியின் சில முக்கிய அம்சங்கள் ஆகும்.

இப்பின்புலத்தில் தராதரமான கல்வியை வழங்குவதற்கும் இத்தகைய புதிய நூற்றாண்டின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் பொருத்தமானவர்களாக 'ஆசிரியர்கள்' பயிற்றப்பட வேண்டிய அவசியம் புதிதாகத் தோன்றியுள்ளது. மரபுவழியான ஆசிரியர் பயிற்சியும் கல்வியும் அரசு சார்பான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளாலும் வழங்கப்பட்டு வந்தது. அண்மைக்காலங்களில் கல்வியியல் கல்லூரிகளிலும் பல்கலைக்கழக கல்விப்பீடங்களாலும் வழங்கப்பட்டு வந்தது.

பயிற்றப்படாத ஆசிரியர்களின் தொகை 33 ஆயிரமாக (1990) ஒரு காலத்தில் இருந்தது. அதாவது ஆசிரியர்களில் 18.7 வீதமானவர்கள் 'சான்றிதழ் அற்ற ஆசிரியர்கள்' என்று அழைக்கப்பட்டனர். இவர்களை வைத்துக் கொண்டு கல்வித்தராதரங்களை மேம்படுத்திக் கொள்ள முடியாது என்ற காரணங்களால் தேசிய கல்வி நிறுவனம் துரிதமான பயிற்சிகளை தொலைக்கல்வி மூலம் வழங்கி இந்தத் தொகையை 18 ஆயிரமாகக் (2001) குறைத்தது.

எனினும் புதிய நூற்றாண்டில் கல்வி இலக்குகளை அடைவதற்கு இத்தகைய ஆசிரியர் குழாம் பொருத்தமற்றது என்பது தெளிவான விடயம். இவர்களுடைய பிரச்சினை ஒருபுறம் இருக்க, ஆசிரியர் பயிற்சி பெற்ற ஏனைய ஆசிரியர்கள் ஏற்கெனவே பெற்ற "ஆசிரியர் கல்வி / பயிற்சி" புதிய நூற்றாண்டின் கல்வி இலக்குகளை அடைவதற்கு பொருத்தமானதா என்ற வினாவும் திட்டவட்டமாக முன்வைக்கப்படுகிறது. இவர்கள் தொடர்ச்சியாக தொழில் தகைமைகளை மேம்படுத்திக் கொள்வதற்கான நிறுவன ஏற்பாடுகள் தேவையென்று இன்று பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. இதன் காரணமாகத்தான் இன்று நாடெங்கும் 100 "ஆசிரியர் நிலையங்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின் பாடசாலைக்கல்வித் தராதர மேம்பாடு பற்றிய பிரச்சினை ஆசிரியர் பயிற்சியின் தராதரம் பற்றிய பிரச்சினையையும் கிளப்புகிறது. இதனால் நடைமுறையில் உள்ள ஆசிரியர் பயிற்சி ஏற்பாடுகள் பற்றிய மீள்பரிசீலனை ஒரு முக்கிய தேவையாகி விட்டது. பிரதானமாக ஆசிரியர் கல்வியை வழங்குகின்ற அல்லது ஆசிரியர் பயிற்சிக்குப் பொறுப்பான ஆசிரிய கல்வியியலாளர்கள் தராதரங்களை ஆராய்ந்து அவற்றை மேம்படுத்தும் முயற்சிகள் புதிய நூற்றாண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தொழில் தகைமை உள்ள பள்ளி ஆசிரியர்கள் உருவாவதை நோக்காகக் கொண்டதே மரபுவழியான பல்கலைக்கழக கல்வியியல் பயிற்சியின் நோக்கமாகும். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் கல்வியியல் கலாசாலைகளிலும் ஆசிரியர் கல்வியை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் இவர்களேயாவர். இவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி பள்ளி மாணவர்களை இலக்காகக் கொண்டதே அன்றி ஆசிரியர் கல்வியைப் பெறவரும் பயிலுநர்களை இலக்காகக் கொண்டது அல்ல. இந்த ஆசிரியக் கல்வியியலாளர்கள் தமது பல்கலைக்கழக டிப்ளோமாவுக்கு மேலதிகமாகவும் கல்வியியலில் உயர் பட்டங்களை பெற்றிருத்தல் வேண்டும் என்ற நியதியும் உண்டு. ஆனால் இவை யாவும் சிறந்த ஆசிரியர் கல்வியியலாளர்களை உருவாக்கப் போதுமானவையன்று என்று கருதப்படுகிறது.**

இத்தகைய ஆசிரியர் கல்வியாளர்கள் பெரும்பாலும் பல்கலைக்கழகங்களில் உள்ள கல்விப் பீடங்களில் கல்வியியல் பயிற்சியைப் பெற்றவர்கள். பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கும் ஆசிரியர் கல்வி அவர்களுடைய வகுப்பறை கற்பித்தல் பணியை சிறப்புறச் செய்யும் நோக்கினை முதன்மையாகக் கொண்டதாகும். ஆகவே, இவர்கள் தொழில் தகைமை உள்ள பள்ளி ஆசிரியர்களாக உருவாவதை நோக்காகக் கொண்டதே மரபுவழியான பல்கலைக்கழக கல்வியியல் பயிற்சியின் நோக்கமாகும். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் கல்வியியல் கலாசாலைகளிலும் ஆசிரியர் கல்வியை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் இவர்களேயாவர். இவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி பள்ளி மாணவர்களை இலக்காகக் கொண்டதே அன்றி ஆசிரியர் கல்வியைப் பெறவரும் பயிலுநர்களை இலக்காகக் கொண்டது அல்ல. இந்த ஆசிரியக் கல்வியியலாளர்கள் தமது பல்கலைக்கழக டிப்ளோமாவுக்கு மேலதிகமாகவும் கல்வியியலில் உயர் பட்டங்களை பெற்றிருத்தல் வேண்டும் என்ற நியதியும் உண்டு. ஆனால் இவை யாவும் சிறந்த ஆசிரியர் கல்வியியலாளர்களை உருவாக்கப் போதுமானவையன்று என்று கருதப்படுகிறது.

எவ்வாறு பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சியின் தராதரங்கள் மேம்படுத்தப்பட வேண்டுமோ அதேபோன்று ஆசிரியர் கல்வியியலாளர்களின் பயிற்சியின் தராதரங்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று கருதப்படுகின்றது. சிறந்த ஆசிரிய கல்வியாளர்களே சிறந்த பள்ளி ஆசிரியர்களை உருவாக்க முடியும் என்பதால் ஆசிரியர் கல்வியாளர்களுக்கான உயர்நிலைப் பயிற்சியில் இன்று அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இலங்கையின் கல்வித்தராதர மேம்பாட்டில் அக்கறை செலுத்தும் வெளிநாட்டு நிறுவனங்கள் ஆசிரிய கல்வியாளர்களின் தராதர மேம்பாட்டில் கூடிய அக்கறை செலுத்தி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அண்மைக்காலங்களில் உலக வங்கியின் அனுசரணையின் பெயரில் பல ஆசிரியர்களுக்கு வெளிநாட்டில் கல்வி பயில விசேட

புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆசிரியர் கல்வியியலாளர்களின் -ஆசிரியர் பயிற்சிக்கான கல்வியியல் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாக பணியாற்றுவோருக்கென விசேடமான ஒரு உயர்கல்விப் பயற்சி நெறியினை 2000ம் ஆண்டில் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் தொடங்கியது. இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. M.A. in Teacher Education என்னும் இக்கற்கை நெறி தற்போது ஏனைய தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளின் ஆசிரியர்களுக்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது. இதற்கான ஏற்பாட்டையும் உதவிகளையும் பொதுநல அமைப்பு நாடுகள் கூட்டமைப்பைச் சார்ந்த அமைப்பொன்று வழங்கியது.

இலங்கையில் தேசிய கல்வி ஆணைக்குழு ஆசிரியர் கல்வியாளர்களின் தொழிற்தகைமைகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டியமையும் இத்தகையதொரு உயர்மட்ட கற்கைநெறி தொடங்கப்பட்டமைக்கு ஒரு முக்கிய காரணமாகும். ஆசிரியர் கல்வியாளர்களுக்கென இலங்கையில் முதன் முதலாக தொடங்கப்பட்ட கற்கைநெறி இதுவாகும்.

ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் ஆசிரியர் கல்வியாளர்களிடம் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய பல்வேறு தேர்ச்சிகளை உள்ளடக்கியதாக இக்கற்கைநெறி அமைந்தது. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போர் கல்வியியல் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாக இருத்தல் வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது.

### இலங்கையில் ஆசிரியர் கல்வியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்

- கொள்கை அளவில் சகல ஆசிரியர்களும் பட்டதாரிகள் ஆதல் வேண்டும்.

  ஆசிரியர் கல்வி பெறாதவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படக் கூடாது என்று தேசிய ஆணைக்குழு மேற்கொண்டுள்ள கொள்கைத் தீர்மானம் இது. ஆனால் இக்கொள்கை முழுமையாக அனுசரிக்கப்படவில்லை.

- நாட்டில் உள்ள 17 கல்வியியல் கல்லூரிகள் க.பொ.த.உயர்கல்வி தகுதி உடையவர்களுக்கு 3 ஆண்டுகாலக் கற்கை நெறியினை வழங்கி தேசிய டிப்ளோமா சான்றிதழை வழங்கி வருகின்றன. இன்று இதுவே ஆசிரியர் ஆவதற்கான முறையான வழிமுறையாகும்.

  இத்தகைய முறையில் நியமனம் பெறாத ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனம் ஒரு குறுங்கால பயிற்சி நெறியினை வழங்குகின்றது.

அத்துடன் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் கல்விமாணி பட்டதாரிகளுக்கும் ஆசிரியர் பதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இது சரியாக ஒழுங்கு படுத்தப்படவில்லை.

இன்று ஆங்கில மொழி பெற்று வரும் முக்கியத்துவம் காரணமாக பல்கலைக்கழகக் கல்வியியல் கற்கை நெறிகளை ஆங்கிலத்தில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில ஆசிரிய கற்கை நெறிகளில் கணிதம், கணினிக் கல்வி என்பன கட்டாய கற்கை நெறிகளாக்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் உதவியுடன் சகல ஆசிரியர் கல்வி நிறுவனங்களும் (பல்கலைக்கழகங்கள் உட்பட) சிறந்த கட்டமைப்பு உள் கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுள்ளன. அதிலே ஆசிரியர் கல்வி வழங்கும் விரிவுரையாளர்கள் சிலருக்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளும் வழங்கப்பட்டன. உலக வங்கியானது இவ்விரிவுரையாளர்களுக்கென ஆசிரியர் கல்வியில் ஒரு முதுமாணிப் பட்டப்படிப்பை திறந்த பல்கலைக்கழகத்தில் அறிமுகம் செய்துள்ளது.

இலங்கையில் ஆசிரியர் கல்வியும் பயிற்சியும் இல்லாமலே ஆசிரியர்கள் தமது A/L மற்றும் கலை / விஞ்ஞான பட்டத் தகுதியுடன் பல ஆண்டுகளுக்கு பாடசாலைகளில் கற்பித்து வரும் முறை இருந்து வருகிறது. பாடசாலைக் கல்வியின் தராதர வீழ்ச்சிக்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும். ஆயினும் பயிற்றப்பட்டவர்களையே நியமிக்கப்பட வேண்டுமென்ற புதிய கொள்கை முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது ஒரு அத்தியாவசியமானதொன்றாகும்.

**இலங்கையில் ஆசிரியர் கல்வியும் பயிற்சியும் இல்லாமலே ஆசிரியர்கள் தமது A/L மற்றும் கலை / விஞ்ஞான பட்டத் தகுதியுடன் பல ஆண்டுகளுக்கு பாடசாலைகளில் கற்பித்து வரும் முறை இருந்து வருகிறது. பாடசாலைக் கல்வியின் தராதர வீழ்ச்சிக்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும். ஆயினும் பயிற்றப்பட்டவர்களையே நியமிக்கப்பட வேண்டுமென்ற புதிய கொள்கை முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது ஒரு அத்தியாவசியமானதொன்றாகும்.**

இன்று ஆசிரியர் கல்வி நிலையங்களில் சுமை அதிகரித்து வருகிறது. இதற்குக் காரணம் ஏராளமான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். தொலைக்கல்வி முறையில் ஆசிரியர் கல்வி பெறுவோர் முழு நேர வேலையில் இருந்து கொண்டு கற்றதனால் புதிய வாய்புக்களை நன்கு பயன்படுத்த முடியவில்லை.

- அதிகாரப் பரவலாக்கம் காரணமாக ஆசிரியர்களைப் பணிக்குச் சேர்த்தல், அவர்களை மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளை மாகாணக் கல்வி அமைச்சு செய்து வருகிறது. இதனால் பல புதிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

  ஆசிரியர்கள் படிப்பதற்காக விடுமுறையை பெற்றுக் கொள்வது தற்போது கடினமாகி விட்டது. இவ்விடயத்தில் மாகாணசபைகளின் விதிமுறைகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இருப்பினும் ஏராளமான ஆசிரியர்களுக்கு இன்று பயிற்சி வழங்கப்பட்டு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இதனால் தராதரங்களில் மாற்றம் ஏற்படவில்லை.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி (2004) ஆசிரியர்கள் செயற்பாட்டு முறையான கற்பித்தல், மாணவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்துதல் என்னும் விடயங்கள் தோல்வி கண்டுள்ளன. பிரதான பிரச்சினை ஆசிரியர்களின் கற்பித்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவது ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் பிரதான பிரச்சினையாக உள்ளது. ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பாட ஏற்பாட்டிலும் பயிற்சியிலும் பலகுறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. சில பயிற்சி நெறிகள் எல்லா மொழிகளிலும் வழங்கப்படுவதில்லை. அத்துடன் ஆசிரியர் கல்வியை வழங்கும் பல்வேறு துறையினருக்கு போதிய அக்கறையில்லை. பல பயிற்சி நெறிகள் தர்க்க ரீதியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. சில ஆசிரிய கல்வி நிறுவனங்களே தொடர் மதிப்பீட்டைச் செய்கின்றன.

ஆங்கில மொழித் தேர்ச்சி ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதனால் வெளிநாட்டுப் பல்கலைக் கழகம் அனுப்பும் அறிஞர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பல கல்வித்துறை விரிவுரையாளர்கள் தமது கற்கை நெறியில் ஈடுபாடு காட்டாது பல இலக்கிய சமூகப் பணிகளில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட விரிவுரையாளர்கள் குறைவு. ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்குத் தகுதியுடைய போதிய விரிவுரையாளர்கள் இல்லை என ஒரு ஆய்வு கூறுகின்றது. இப்பின்புலத்தில் சில பாடங்களை விசேட தேர்ச்சி பெறாத சாதாரண விரிவுரையாளர்களே கற்பிக்கிறார்கள்.

நிறுவனங்களிடையே இவ்விடயத்தில் ஒருமைப்பாடு இல்லை. ஆசிரியர் கல்வி விரிவுரையாளர் புதிதாக பணிக்கு நியமனம் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. காலியான இடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை. ஆசிரியர் கல்வி விரிவுரையாளர்களில் ஒரு சிலருக்கு வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புகள் கிடைக்கின்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் பெரும்பாலானவர்கள் கலாநிதிப்பட்டம் பெறாதவர்கள். தேசிய கல்வி நிறுவனத்தில் கவர்ச்சியற்ற சம்பள அமைப்புக் காரணமாக சிறந்த கல்வித் தகுதிகள் கொண்டவர்கள் அந்நிறுவனத்தை நாடுவதில்லை.

ஆங்கில மொழித் தேர்ச்சி ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதனால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் அனுப்பும் அறிஞர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பல கல்வித்துறை விரிவுரையாளர்கள் தமது கற்கை நெறியில் ஈடுபாடு காட்டாது பல இலக்கிய சமூகப் பணிகளில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட விரிவுரையாளர்கள் குறைவு. ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்குத் தகுதியுடைய போதிய விரிவுரையாளர்கள் இல்லை என ஒரு ஆய்வு கூறுகின்றது. இப்பின்புலத்தில் சில பாடங்களை விசேட தேர்ச்சி பெறாத சாதாரண விரிவுரையாளர்களே கற்பிக்கிறார்கள்.

**முடிவாக...**

ஆசிரியர் கல்வித்துறையில் தெளிவாகத் தெரிகின்ற பல குறைபாடுகள் இருக்கின்றன. இவற்றை இனங்கண்டு அகற்றுவதில் தான் பாடசாலைக் கல்வியின் தராதர மேம்பாடு தங்கியுள்ளது எனலாம்.

அரசாங்கம் வழங்கும் பயிற்சி வாய்ப்புகள் ஒருபுறம் இருக்க, பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது சொந்த முயற்சியின் ஊடாக தமது கல்வியியல் அறிவை மேற்கொள்ள வேண்டியது முக்கியமானது.

இன்று வெளியாகியுள்ள தமிழ்க்கல்வியியல் நூல்களை ஆங்காங்கு உள்ள நூல் நிலையங்களிலும், ஆசிரியத்துவம் தொடர்பான பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றை தாமே சேகரித்து தமது பயில்வுக்கான தமது சாதனங்களை தாமே தேடிச் சேகரிக்கும் பழக்கம் ஆசிரியரிடத்து உறுதியாக ஏற்பட வேண்டும்.



## வாழ்த்துகின்றோம்!

பேரா. சோ. சந்திரசேகரம் மணிவிழாக்காணும் இத்தருணத்தில் அவரை அகவிழி வாழ்த்துகிறது.

பேராசிரியர் அவர்கள் கல்வியியல் துறையில் கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக பணி புரிந்து கொண்டிருக்கிறார் அத்துடன் இருபதுக்கும் மேற்பட்ட கல்வியியல் சார் நூல்களை வெளியிட்டுள்ளார். ஆசிரிய மாணவர்களின் ஆசிரியராக ஆய்வு வழிகாட்டியாக இருந்து அளப்பரிய பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அவர் பணிகள் சிறக்க வேண்டும். அவர் குடும்பம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வேண்டும்.

அகவிழி பேராசிரியரின் மகிழ்வில் இணைந்து கொள்கிறது.

விவாதம்

# கல்வியின் உச்சங்களை எட்டிய "கிராமத்துப் பையன்கள்"

> **கிராமத்துப் பையன்களோ அல்லது நகரத்துப் பையன்களோ உயர்கல்வியின் உச்சங்களை ஆங்கிலத்தின் துணையின்றித் தொட முடியுமா? உச்சங்களை அடைய உதவ முடியாவிடின் பல்கலைக்கழகங்களால் பயன் என்ன? என்பன குறித்தெல்லாம் தென்பகுதி புத்திஜீவிகளால் இன்று விவாதிக்கப்படும் விடயங்களாக உள்ளன என்பதையும் நம்மவர்கள் கவனிக்க வேண்டும்.**

கல்வித்துறையிலும் அரசியலிலும் தம் வாழ்நாளில் பல சாதனைகளைச் செய்து மறைந்த தலைவர்கள் பற்றிய "பேனாச் சித்திரங்களை" ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதிவரும் எழுத்தாளர்களில் 'ஒப்சேவர்' வார ஏட்டின் ஆசிரியர் அஜித் சமரநாயக்கவும், மருத்துவத்துறைப் பேராசிரியர் கார்லோ பொன்சேகவும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சிறப்புமிக்க எழுத்தாளர்கள். இலங்கையின் இருபதாம் நூற்றாண்டின் சமூக பண்பாட்டு வரலாற்றின் பல அம்சங்களைத் தொட்டுக்காட்டுவதும் அலசுவதும் இவர்கள் இருவரதும் எழுத்துக்களின் சுவாரசியமான அம்சம்.

09.12.2004 'தி ஐலண்ட்' பத்திரிகையில் பேராசிரியர் கார்லோ பொன்சேக காலம் சென்ற பேராசிரியர் சிறிசேன திலகரத்தின பற்றி ஒரு நினைவுக் குறிப்பை எழுதினார். அந்த பேனாச் சித்திரத்தின் ஊடே இலங்கையின் கல்வி வரலாறு பற்றிய சில உண்மைகளை அவருக்கே உரிய உள்ளத்தை உறுத்தும் பாணியில் (Provocative style) பொன்சேக எழுதியிருந்தார். பேராசிரியரின் கட்டுரையில் உள்ள முக்கிய குறிப்புகளும் தகவல்களும் விமர்சன நோக்கில் கீழே தரப்பட்டுள்ளன.

1. சிறிசேன திலகரத்தின 1938ம் ஆண்டில் பிறந்தவர். தமது 34வது வயதில் வித்தியோதயப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியராக நியமனம் பெற்றார். உலகின் பல பல்கலைக்கழகங்களிலும், ஐ.நா.தாபனத்தின் உறுப்பு நிறுவனங்களிலும் பணியாற்றிப் புகழ் பெற்றார். 1995ம் ஆண்டில் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவராக நியமனம் பெற்றார். புலமைத் துறையின் மிக உயர்பதவி இது. குறுகியகாலம் சுகவீனமாக இருந்த இவர் 2001ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காலமானார்.

2. பேராசிரியரின் சாதனைகளை இவரின் இளமைக்கால வாழ்க்கைப் பின்புலத்தில் நிறுத்தும் பொன்சேக காலஞ்சென்ற பேராசிரியரை ஒரு "கிராமத்துப் பையன்" என்றும் 'கீழ்மத்திய தரவர்க்கத்தில்' தோன்றிய நுண்ணறிவுடைய பையன் என்றும் (bright lower middle class village boy) வருணிக்கிறார்.

ஒரு கிராமத்துச் சிறுவன் தனது முயற்சியாலும் திறமையாலும் அதிஸ்டத்தாலும் சமூக ஏணியின் படிகளில் ஏறி புலமைத்துறையின் உச்சங்களைத் தொட்டான் என்கிறார். முயற்சி, திறமை, அதிஸ்டம் என்பனவற்றோடு இன்னொன்றையும் பொன்சேக குறிப்பிடுகிறார். அதனை 'a higher education in the English medium' -ஆங்கிலத்திலான உயர்கல்வி என்று கூறுகிறார்.

3. பொன்சேக அவர்கள் சொல்லாமல் சொல்லும் விடயம் இதுதான். "ஆங்கிலக்கல்வி திலகரத்தினவிற்குக் கிடைத்திருக்காவிட்டால் இந்த உயர்சாதனைகள் எதனையும் அந்தப் பையனால் சாதித்திருக்க முடியாது" ஆம்! திலகரத்தினாவின் தந்தை ஒரு பள்ளி ஆசிரியராகவோ எழுதுவினைஞராகவோ இருந்திருப்பார். அத்தகைய கீழ் மத்திய தரப் பதவி ஒன்றிலேயே திலகரத்தினவின் வாழ்க்கையும் முடிந்து அவர் வாழ்வு 'ஒரு சாதாரண மனிதனின்' சரித்திரமாகவே ஆகியிருக்கும்.

4. தொடர்ந்து எழுதும் பொன்சேக பின்வருமாறு கூறுகிறார். "அவரைப் போலவே நானும் கீழ் மத்திய தரவர்க்கத்தில் தோன்றியவன். கல்வி வாழ்வின் உச்சங்களைத் தாம் இருவரும் தொட்டோம். ஆங்கிலத்தில் உயர் கல்வியைப் பெற்ற

அர்ஜுனா

காரணத்தினால்தான் அந்தப் பேறு எங்களுக்கு வாய்த்தது. அந்த உயர் கல்வியைக் கூட அரசுச் செலவில் படிக்க முடிந்தது. இவற்றைப் பற்றி நாம் எமக்குள் பேசிக் கொள்வதுண்டு. விவாதிப்பதுண்டு.

5. சிறிசேன திலகரத்தின நினைவுப் பேருரை 9-12-2004 திகதியன்று கலாநிதி உஸ்வத்த ஆராச்சி அவர்களால் நிகழ்த்தப்பட்டது. பேராதனையில் பொருளியலில் சிறப்புப்பட்டம் பெற்ற உஸ்வத்த ஆராச்சி அவர்களும் சர்வதேச மட்டத்தில் புகழ் ஈட்டிய பொருளியலாளர் ஆவர். கார்லோ பொன்சேக தம் கட்டுரையின் பிற்பகுதியில் இப்படி எழுதுகிறார்.

"இந்த வருடத்தின் நினைவும் பேருரை இன்னொரு கிராமத்துப் பையனான கலாநிதி உஸ்வத்த ஆராச்சி அவர்களால் நிகழ்த்தப்படுகிறது. இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் (இலங்கை) அரச செலவில் படித்தவர். அவர் தனது உரைக்கு தேர்ந்துள்ள தலைப்பு. "பல்கலைக்கழகங்கள் எதற்காக?" -"What are Universities for?"

உஸ்வத்த ஆராச்சி அவர்களின் பெற்றோர் இருவரும் கிராமத்துப் பள்ளி ஆசிரியர்கள். தென்பகுதிக் கிராமத்தின் பள்ளியில் ஆங்கிலத்தில் கற்றதன் மூலம் உயர்கல்வியின் உயர்படிகளில் கால்வைக்கும் வாய்ப்பைப் பெற்றவர். இது பற்றி உஸ்வத்த ஆராச்சி அவர்களே முன்பு ஒரு தடவை எழுதியிருந்தது பொன்சேக கூற்றைப் படித்த போது எனக்கு ஞாபகம் வந்தது.

6. 1960ம் ஆண்டளவில் சிறிசேன திலகரத்தின தம் பட்டப்படிப்பை முடித்து வெளியேறுவதுடன் இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் பிறக்கிறது.

அதுதான் "சுயபாசையில் உயர்கல்வி" - "ஆங்கிலம் அவசியமில்லை" என்பவர்கள் சுயபாசை ஆதரவாளர்கள். "ஏன்? ஆங்கிலத்திலும் படிக்க விடுங்களேன்" என்று கீழ் மத்திய தர வர்க்கம் கெஞ்சியது. தங்களுக்கு ஆங்கிலக் கல்வி மூலம் கிடைத்த சில சலுகைகள் பறிபோவதையிட்டு இவர்கள் கவலைப்பட்டனர். உயர் வர்க்கங்கள் இந்தப் பிரச்சினையால் எந்தவித கலக்கத்தையும் அடையவில்லை. கீழ்மத்திய தர வர்க்கத்தின் போட்டிக்கு ஈடு கொடுக்கமாட்டாமல் திணறிக் கொண்டிருந்த இவ்வர்க்கம் அந்தப் போட்டி முடிவுக்கு வந்து விட்டதே என ஆறுதல் கொண்டது. தங்கள் பிள்ளைகளை ஹார்வாட்டிற்கும், சிக்காக்கோவிற்கும் அனுப்பும் கனவுகளில் உயர்வர்க்கம் திளைத்தது. பொன்சேக சொல்கிறார்.

"பல்கலைக்கழகக் கல்வியில் (இன்று) எமது நாட்டில் தீர்க்கப்படாமல் உள்ள பிரதான பிரச்சினை இதுதான். கிராமத்து ஏழைகளின் கோரிக்கைகளுக்கும், கீழ் மத்திய தர வர்க்கத்தின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையிலான முரணும் இதனால் எழும் விறைப்பு நிலையும். (Tension). இதைத் தீர்ப்பது எப்படி"

கட்டுரையின் இடையே பொன்சேக. தரும் மேலும் ஒரு தகவல் காலம் சென்ற பேராசிரியருக்கு இரு புதல்விகள் உள்ளனர். அவர்கள் பிரித்தானியப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைப் பெற்றனர். (தந்தையின் பாதையில் அவர்களாலும் ஆங்கிலத்தின் வழி முன்னேற முடிந்தது)

இன்று "கல்வித்துறையில் தனியார் துறையைத் தாராள மனதுடன் அனுமதிக்க வேண்டும்: "விரும்பியவர்களை ஆங்கிலத்தில் படிக்க அனுமதிக்க வேண்டும்" உயர் கல்விக்கு ஆங்கிலம் அவசியம்" இப்படியான குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன.

தமிழ் புத்திஜீவிகளும், ஆய்வறிவாளர்களும் இதுபற்றி என்ன சொல்கிறார்கள்? 'வர்க்க' அடிப்படையிலான ஆய்வுகளை ஒருபுறம் வைத்துவிட்டு "உயர் கல்வியில் தமிழினத்தை ஓரம் கட்டுவதற்கு" சுயபாசைக் கல்வி ஒருவாய்ப்பான கருவியாகப் பயன்பட்டு வருகிறது என்பதையிட்டு எம்மவர் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

கிராமத்துப் பையன்களோ அல்லது நகரத்துப் பையன்களோ உயர்கல்வியின் உச்சங்களை ஆங்கிலத்தின் துணையின்றித் தொட முடியுமா? உச்சங்களை அடைய உதவ முடியாவிடின் பல்கலைக்கழகங்களால் பயன் என்ன? என்பன குறித்தெல்லாம் தென்பகுதி புத்திஜீவிகளால் இன்று விவாதிக்கப்படும் விடயங்களாக உள்ளன என்பதையும் நம்மவர்கள் கவனிக்க வேண்டும். ❑

---

வரலாற்றுப் பாடத்தைக் கூட ஒழுங்காகக் கற்றுத்தரவில்லை. எவன் ஆண்டான்? இவன் எத்தனை பேரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்? அப்பாவுக்கு எதிராக மகன் போர் செய்தான். இப்படி இல்லாமல் historical dynamics, social dynamics பற்றி மிக அருமையாகக் கொஸாம்பி சொல்வார். வரலாற்றைத் தேடி நாம் செல்வது அவசியம் இல்லை. அது நம்மைச் சுற்றி எங்கும் இருக்கிறது. கிராம வாழ்விலும் நம் வீட்டைச் சுற்றி வெளியே வந்தால் எங்கேயும் பார்க்கக் கிடைக்கிறது. அவற்றைப் பார்ப்பதற்கேற்ற கண்களும், அவை சொல்லும் கதைகளைக் கேட்கக் காதுகளும்தான நமக்குத் தேவை.

"தமிழகத்தில் கல்வி" — வே. வசந்தி தேவியுடன் உரையாடல்

# தமிழகத்தில் கல்வி




**நூல்:**
**தமிழகத்தில் கல்வி**
வே. வசந்தி தேவியுடன்
உரையாடல்

**சந்திப்பு:**
சுந்தர ராமசாமி

**வெளியீடு:**
காலச்சுவடு பதிப்பகம்
பக்: 205
விலை : **90.00** (இந்திய ரூபா)

இன்று தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் கல்வியியலாளர்களுள் ஒருவர் வே. வசந்திதேவி. இவர் வரலாற்றில் முதுகலைப்பட்டமும் முனைவர் பட்டமும் பெற்றவர். கல்லூரியில் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். 1992 முதல் 1998 வரை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் பணிபுரிந்துள்ளார்.

தற்போது பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் மனித உரிமை பாதுகாப்பு இயக்கங்களிலும் பெண்கள் இயக்கங்களிலும் செயற்பட்டு வருகின்றார். மற்றும் பல்வேறு கல்விசார் ஆணைக் குழுக்களிலும் அங்கத்தவராக உள்ளார்.

கல்வி பற்றிய மாற்றுச் சிந்தனைகளுடன் தீவிரமாக இயங்கி வருபவர் வசந்திதேவி. இவருடன் தமிழின் நவீன எழுத்தாளரான சுந்தர ராமசாமி அவர்கள் நீண்ட உரையாடல் நிகழ்த்தி அதனை "தமிழகத்தில் கல்வி" எனும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தராக உள்ள பொழுது அவர் மேற் கொண்ட கல்விசார் நடவடிக்கைகள், பாடத்திட்ட உருவாக்கம், பல்வேறு துறைசார் கற்கைகளுக்கிடையிலான ஊடாட்டம் மாற்றுக் கல்விச் செயற்பாடுகள், ஆசிரியர் சமூகம், மாணவர் சமூகம், சமூகத்துக்கும் கல்விக்கும் இடையிலான தொடர்புகள், பட்டப் பின்படிப்பிலான ஆய்வுகள்... என விரிவான புள்ளிகளில் இருந்து தனது சிந்தனைகளை அனுபவங்களை எதிர்பார்ப்புகளை வசந்திதேவி பகிர்ந்து கொண்டுள்ளார்.

அவர் வெளிப்படுத்திய சில கருத்துக்கள்.

"பல்கலைக்கழகத்தில் செல்வாக்கு மிகுந்த சிலருக்கு டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டுமென்று பல நிர்ப்பந்தங்கள் வந்தன. அவற்றையெல்லாம் மிகவும் கஷ்டப்பட்டு நிறுத்தினேன். செனட் கூட்டங்களில் இவற்றிற்கான தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அந்தத் தீர்மானங்கள் எடுக்க விடாமலேயே தடுத்திருக்கிறேன். என்னுடைய ஆறு ஆண்டு பதவிக் காலத்தில் ஆய்வில் ஈடுபடாத எவருக்கும் டாக்டர் பட்டம் கொடுத்ததில்லை."

"நம்முடைய ஆசிரியர் சமூகம் ஒரு அறிவார்ந்த சமூகமாக இல்லாமல் ஆகிவிட்டது. எப்படி மாற்றுவது என்று தெரியவில்லை. ஆரம்பத்திலிருந்தே வர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். மாணவர்களாக இருக்கும் போதே இந்த மாற்றங்கள் வரவேண்டும்."

"மாணவர்கள் எதெதற்கோ போராடுகிறார்கள் தங்களது வகுப்புகள் சரியாக நடக்க வேண்டும். நன்கு கற்றுத்தர வேண்டும் என்று கோரி எந்தப் போராட்டமும் நடந்ததில்லை."

"வசதி படைத்தவர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளை ஓரளவு தரமான கல்வி அளிக்கும் பள்ளிகளில் படிக்க வைக்கிறார்கள். சாதாரண மக்களின் குழந்தைகள் அவர்களின் தலை விதிப்படி விடப்படுகிறார்கள். அமெரிக்கா போன்ற வசதிபெற்ற நாடுகளிலெல்லாம் வசதி வாய்ந்தவர்களுக்குச் சில சிறப்புப் பள்ளி இருந்தாலும் மித மிஞ்சிய வசதி உள்ளவர்கள் தான் தங்கள் குழந்தைகளை சிறப்புப் பள்ளிகளில் சேர்க்க முடியும். ஆனால் மற்றப்படி அனைவருக்கும் ஒரே மாதிரியான பள்ளி முறைதான் அங்கு உள்ளது. இங்கு இருக்கிற மாதிரி ஏற்றத்தாழ்வான இரட்டை அடுக்கு முறை அங்கு இல்லை."

"கலைச் சொற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதிலும் அதைப் புரிந்து கொள்வதிலும் தான் மாணவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது என்று நினைக்கிறேன். தமிழில் அறிவியலைக் கொண்டு வருவோம் என்று சொல்கிறார்கள். இதனால் மாணவர்களுக்கு நன்மை இருக்கும் என்றால் ஆங்கிலத்தில் அந்தக் கலைச் சொற்களை வைத்துக் கொள்ளலாம். இருந்தாலும் அந்தச் சொற்களைப் புரிந்து கொள்வதிலும், அந்தத் தமிழைப்

புரிந்து கொள்வதிலும் அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது."

History of Science மிகக் கடினமான ஒரு பாடமாக இருந்தது. பி.எஸ்ஸி. எம். எஸ்ஸி பிஎச்.டி படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும் இந்தப் பாடத்தைப் பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. விஞ்ஞானத்தின் மகோன்னதத் தன்மை குறித்தும் அதன் வரலாறு பற்றியும் மனித சமூகத்தின் மீதான அதன் தாக்கம் பற்றியும் அறிவியல் மாணவர்கள் எதுவும் படிப்பதில்லை. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வளர்ச்சியடைவதன் சமூகப்பின்புலம் என்ன, சமூக விளைவுகள் என்ன என்பதைப் பற்றி விஞ்ஞானத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையிலான ஊடாடலைப் பற்றி எதுவும் தெரியாது."

இவ்வாறு பல்வேறு விரிவான ஆழமான சிந்தனைகளை வசந்திதேவி பகிர்ந்து கொண்டுள்ளார். இந்நூல் நிச்சயம் படிக்க வேண்டிய நூல்களும் ஒன்று. புதிய சிந்தனைக்கும் புத்தாக்கத்துக்கும் வழிகாட்டக் கூடிய நூல்

**செ. துரைசிங்கம்**

---

ஒரு குட்டிக்கதை சொல்கிறேன், 'புதர்வீடுகளில் வாழும் காட்டு முயல் குட்டிகள் கும்மிருட்டுக்குப் பயப்படுகின்றன. அதனால் முயல்கள் வருந்துகின்றன. தூக்கனாங்குருவிக் கூட்டில் விளக்கெரிவதைப் பார்த்த முயல்கள், கொழுந்திலைகளில் தெளிந்த நீரைக் கொண்டு வந்து அதில் நிலவை எதிரொளிக்கச் செய்கின்றன. புதர்வீடுகளில் பொன்னொளி பரவுகின்றன. குட்டிகள் பயம் மறந்து தூங்குகின்றன.' ஒருமுறை இக்குட்டிக் கதையை நாடகமாகப் போட்டோம். அப்போது ஒளியின் வரலாற்றுப் பின்னணி என்ன, அதை யார், எப்படி கண்டுபிடித்தார் போன்ற கேள்விகளை குழந்தைகள் எழுப்பினார்கள். ஒளியின்' நுண்மையான புதிர்களை கற்பனை செய்து விளங்கிக்கொள்ள அவர்கள் முயன்றார்கள். இப்படி நாடகத்தின் ஊடாக ஒளி பற்றிய அலாதியான அனுபவங்களை அவர்கள் பெற்றதை நான் உணர்ந்தேன். நுண்ணறிவு மிக்க செயல் அனுபவங்களே மனிதனின் வளர்ச்சிக் கூறுகள். அப்படியோர் செயலனுபவக் கல்வியை குழந்தைகள் நாடகம் தருகிறது.

பள்ளிக்கூடங்களும் அதன் வகுப்பறைகளும் சூட்சுமம் மிகுந்த புதிர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றன. தீராத கற்றல் வேட்கையோடு இளம்குழந்தைகள் கூடியிருக்கிறார்கள். எழுதுதல், படித்தல், வீட்டுப்பாடம், மனப்பாடம் என இயங்கும் ஏட்டுப் படிப்புக்காக மட்டும் அவர்கள் பள்ளிக்கு வரவில்லை. மாறாக பள்ளிக்கூடத்தில் தங்களுக்காக காத்திருக்கும் புதியவற்றுக்காகவும் ஒருவரை ஒருவர் சந்திப்பதுக்காவும் வருகிறார்கள். அவர்களின் எண்ணற்ற மனத்திசைகளைத் தன் வயப்படுத்தி தன் கற்பித்தலை நிகழ்த்த ஆசிரியர்களுக்கு ஏராளமான திறன்கள் தேவைப்படுகின்றன. வெறும் மேடையில் தோன்றி அம்மேடையை கடலாகவும் மலையாகவும் தன் குரல், உடல் அசைவுகள் மூலம் மாற்றும் நாடகக் கலைஞர்களின் திறன்கள் பள்ளி ஆசிரியரின் கற்பித்தல் நிகழ்வைச் சிறப்படையச் செய்யும் சாத்தியக்கூறுகளை கொண்டிருக்கிறது. மாறாத சூழல்களால் குழந்தைகளை வெறுப்பேற்றும் பள்ளியும் வகுப்பறையும் அவரால் பல்வேறு தாள லயங்களைக் கொண்ட சூழல்களை அடையும். அப்போது அறிவியல் பாடம் அறிவியல் தன்மை கொண்டதாக, வரலாற்றுப் பாடம் வரலாற்றுக் காலச் சூழல் கொண்டதாக, மொழிப்பாடம் கவித்துவம் கொண்டதாக மாறும். அவ்வாறான சூழல்களில் குழந்தைகளின் வளர் இதயம் மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் அடையும்.

மேற்கத்திய நாடுகள் உட்பட உலகில் பல்வேறு நாடுகளில் பள்ளிகளில் குழந்தைகள் நாடகத்துக்கு என்று தனித்துறைகள் இருக்கின்றன. அதற்கென ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அப்படி ஒரு கோமாளி நம் குழந்தைகளிடமும் வேண்டும். கரடுமுரடான கல்விப் பாடவேளைகளை இதமான உணர்வுகளால் கோமாளியால் எளிதாக்க முடியும். தாய், தந்தை, தாத்தா, பாட்டி, ஆசிரியர் மற்றும் உறவினர்கள் அனைவரிடமும் குழந்தைகள் ஒரு கோமாளியையே எதிர்பார்க்கிறார்கள். அரசவைகளில் விகடகவிகள் இருந்தது போல பள்ளிக்கூடங்களில் ஒரு கோமாளி நாடக ஆசிரியர் இருந்தால் நல்லதுதான்.

**வேலு சரவணன்** (நாடகத்துறை விரிவுரையாளர், கலைஞர்)

*தீரா நதி டிசம்பர் 2004.*

## கடிதங்கள்

அகவிழி இதழ்களை தொடர்ந்து வாசித்து வருகிறேன். ஆசிரியர் சமூகம் அறிந்து கொள்ள வேண்டிய பல்வேறு விடயங்களை கட்டுரைகளை தாங்கி வருகின்றது. ஆனால் இக்கட்டுரைகள் ஆசிரியர்களின் அகவிழியை திறந்து அவர்களது "ஆளுமையை" நடத்தை மாற்றங்களை" எவ்வளவு தூரம் கொண்டு வர முயற்சி செய்கிறது என்பது கேள்வியே.

ஏனெனில் ஆசிரியர் சமூகம் "கற்றோர் சமூகம்" "சமூகத்தை ஆற்றுப்படுத்தும் பாரிய பொறுப்புள்ளவர்கள்" என்ற புரிதல் எதனையும் கொண்டிராது மந்த புத்தியுள்ள ஓர் சமூகமாகவே மாறிவிட்டது. தமக்கான பொறுப்பு என்ன என்பது பற்றிய உணர்நிலை தோற்றுவிப்பதற்கான சாத்தியங்களை இனங்காண மறுக்கிறார்கள். தொழில்சார் மனோபாவமும் இலக் கற்று இயந்திரத்தனமாக மாறிவிட்டது.

வடகிழக்கு வாழ் ஆசிரியர் சமூகம் முன்னுள்ள கடமைகள் பொறுப்புகள் முன்னைய காலத்தை விட இன்று அதிகமாகவே உள்ளது. நீண்ட நெடிய போர்ச்சூழல் மாணவர் சமூகத்தை எந்தளவு பாதித்துள்ளது என்பது குறித்து நாம் பட்டியல் போடத் தெரியவில்லை.

ஆனால் இவை பற்றியெல்லாம் புரிந்து கொண்டு சிந்தித்து செயற்படக்கூடிய "ஆற்றல் மிகு ஆசிரியர்" சமூகம்" ஏன் தமிழர்கள் மத்தியில் உருவாகாமல் உள்ளது என்பது பற்றியெல்லாம் அகவிழி பரிசீலிக்க வேண்டும்.

அகவிழி ஆலோசகர் குழு அரசு தரப்பு கொள்கை விவகாரங்களில் கலந்து கொண்டு ஆலோசனைகள் சிந்தனைகள் வழங்குகிறது போல் அல்லாமல், தமிழ்த்தரப்பு விவகாரங்களில் தம்மைக் கரைத்து அதன் பிரதிநிதிகளாக இருந்து சிந்திக்க வேண்டும். எழுத வேண்டும் மாற்றுப் பார்வைகளை கல்விச் சூழலில் உருவாக்க தமது ஆளுமையை அறிவைப் பயன்படுத்த வேண்டும். அகவிழி தமிழ்க் கல்விச் சூழலில் புதிய பார்வைக்கும் புதிய சிந்தனைக்கும் வழிகாட்ட வேண்டும்.

**பூ. வரதராஜன்**
**ஆசிரியர், கிளிநொச்சி**

போர்ச்சூழல் காரணமாக பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் மீண்டும் பாடசாலைகளில் இணைந்து தமது கல்வியை தொடரக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. இந்நிலையில் உள்ள மாணவர்களின் கற்றல் திறனை வளர்க்கும் விதத்திலான கற்பித்தல் பாங்கு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டும். வழமையான கற்பித்தல் முறைகளை இங்கு கடைப்பிடிக்க முடியாது தானே.

அதுபோல் போர்க்காலச் சூழலில் பிறந்து வாழ்ந்து ஆரம்பக் கல்வி பெறும் மாணவர்களுக்கான கற்பித்தல் செயல்பாடு எப்படி இருக்க வேண்டும்? எந்த நெருக்கடியும் அற்ற சூழலில் பிறந்து வளர்ந்த பிள்ளைக்கும் நெருக்கடிக்குள் பிறந்து வளர்ந்த பிள்ளைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் நடத்தைப் பண்புகள் உண்டு. அல்லவா? அப்படியானால் இவை பற்றியெல்லாம் ஆசிரியர்கள் புரிந்து கொள்ள வேண்டிய தேவை தற்பொழுது உண்டு. ஆகவே இவ்வாறான நிலைமைகளை விளக்கும் கட்டுரைகளும் அகவிழியில் இடம் பெறவேண்டும்.

**ராம் மோகன்**
**ஆசிரியர்**
**தீவக வலயம்.**

அகவிழி 3 இதழ்களும் தரமாக உள்ளன. தொடர்ந்து வரும் இதழ்கள் கூட தரத்தைப் பேண வேண்டும். தொடர்ச்சியும் தரமும் தான் அகவிழிக்கான முக்கியத்துவத்தை அவசியத்தை உணர்த்தும்.

ஒவ்வொரு கல்வி வலயம் தோறும் அகவிழிக்கான அறிமுகக் கூட்டங்களை வாசகர்கள் கலந்துரையாடல்களை ஊக்குவிப்பது நல்லது. அகவிழி தன்னை ஊன்றி திடப்படுத்தி வளர்வதற்கு இது உதவும்.

**பூ. திருயோகநாதன்**
**கோண்டாவில் மேற்கு**
**கோண்டாவில்.**